DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
Ragu Thillainathan Sales Representative homesbyraghu@gmail.com

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran Tax Consultant
Tel: 647-344-6600

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாராச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1528 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 18, 2025

## Mayor of Brompton, Patrick Brown was honored with Plague for the recent unveiling of the Tamil Genocide Monument in Brampton

# பிரம்ரன் மாநகரில் இலங்கை அரசின் தமிழர் இனப்படுகொலைகளுக்கான நினைவுத்தூபியை நிறுவிய மேயர் பெற்றிக் பிரவுண் கௌரவிக்கப்பெற்றார்




கடந்த 15-07-2025 அன்று செவ்வாய்க்கிழமையன்று கனடா- பிரம்ரன் மாநகர பிதா (மேயர்) கௌரவ பெற்றிக் பிரவுண் அவர்களைக் கௌரவிக்கும் முகமாக பிரம்ரன் ஸ்ரீ சபரிபீடம் ஸ்ரீ ஐயப்பசுவாமி தேவஸ்தான அறங்காவல் சபைத் தலைவர் அருண்சுவாமி அவர்கள் ஏற்பாடு செய்த விசேட வைபவத்தில் கனடா உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அவர்களும் கலந்து கொணடார். அண்மையில் பிரம்ரன் மாநகரில் இலங்கை அரசினால் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைகளை நினைவுகூரும் வகையில் நிறுவப்பெற்ற நினைவுத்தூபி தொடர்பான தனது முழு அதிகாரத்தையும் ஆதரவையும் வழங்கிய பெற்றிக் பிரவுண் அவர்கள் கௌரவிக்கப்பெற்றபோது பிரம்ரன் ஸ்ரீ சபரிபீடம் ஸ்ரீ ஐயப்பசுவாமி தேவஸ்தானத்தின் அறங்காவல் சபை உறுப்பினர்கள் மற்றும் மேயர் அவர்களின் பிரதம தலைமை உத்தியோகத்தர் பாபு நாகலிங்கம் அவர்களும் உடனிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# "சிறு கற்கள் கொண்டு பெரும் சரித்திரம் படைப்போம்"

## ஸ்காபுறோ தமிழ்ச் சமூக மையத்தின் நிதி சேகரிப்புக் குழுவினர் கனடா வாழ் தமிழ் மக்களை வேண்டிநிற்கின்றனர்

கனேடியத் தமிழர்களின் நீண்டகால எதிர்பார்ப்பான தமிழ்ச் சமூக மையம் ஒன்றை கட்டி முடிக்கும் முயற்சி கடந்த சில வருடங்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பதை பலரும் அறிவார்கள். ரொரன்ரோ நகர சபை இதற்கான நிலத்தை **311 Staines** வீதியில் வழங்கியுள்ளது. கனடாவின் மத்திய மற்றும் ஒன்றாரியோ மாகாண அரசுகள் 26.3 மில்லியன் டொலர் நிதி உதவி வழங்குவதாக உறுதியளித்துள்ளன.

இந்த நிதி உதவியினை பயன்படுத்தி தமிழ்ச் சமூகமையத்தை கட்டி முடிப்பதற்கு தமிழ்ச் சமூகத்திடமிருந்து 15 மில்லியன் டொலர்களை திரட்ட வேண்டியது எமது முக்கிய பணியாக நாம் மேற்கொள்ள வேண்டும். அத்துடன் இந்த கட்டுமானத்தை 2027ம் ஆண்டுக்குள் நிறைவு செய்வ வேண்டும் என்பதும் அவசியம். மூன்று இலட்சத்திற்கும் அதிகமாக தமிழர்கள் வாழும் இந்த நாட்டில் அனைவரும் பங்களித்தால் இந்த இலக்கை அடைய முடியும். இவ்வாறு ஸ்காபுறோ நகரில் அமையும் வகையில் திட்டமிடப்பட்டுள்ள "தமிழ்ச் சமூக மையத்தின்" நிதி சேகரிப்புக் குழுவினர் கனடா வாழ் தமிழ் மக்களிடம் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

தமிழ்ச் சமூக மையம் Tamil Community Centre
தமிழராய் நாம் பெருமைகொள்ள ஒரு இடம்
Become a Founding Family of TCC!
Join the Family Giving Campaign.
Become one of 2,500 families to donate $10,000 over the next two years.

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851


சரவணா பவன் சைவ உணவக
ஸ்காபுறோ கிளையில் 30 பேருக்கு மேற்படாமல்
உங்கள் விசேட கொண்டாட்டங்களை நடத்தலாம்
We Celebrate your
Special Day
at Scarborough
Saravanaa Bhavan.
கனடாவில் நான்கு கிளைகளைக் கொண்டியங்கும் சரவணா பவன் சைவ உணவகத்தின்
ஸ்காபுறோ கிளையில் இப்பொழுது 30 பேருக்கு மேற்படாமல்
உங்கள் விசேட கொண்டாட்டங்களை நடத்தலாம்.
வாரத்தில் திங்கட்கிழமை தொடக்கம் வியாழக்கிழமை வரையான நான்கு நாட்கள்
மட்டுமே இவ்வாறான கொண்டாட்டங்களை நடத்த முடியும்.
சிறப்பு உணவு வகைகளுக்கும் நீங்கள் ஆடர் செய்யலாம்.
Monday to Thursday | Maximum of 30 People
மேலதிக விபரங்களுக்கு:
+1 (437) 603-7755
என்னும் இலக்கத்தை அழைக்கவும்
*Conditions apply
HSB CANADA
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
SCARBOROUGH 416 293 7755
MISSISSAUGA 905 290 0769
BRAMPTON 905 457 7575
DELTA B.C 778 578 7575

Canada — We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# உலக அரசியல் அதிகாரத்தை கைகளுக்குள் வைத்திருக்கும் "தலைவர்களும்" அவர்களது "கையாட்களும்" ஐ. நா வும் மக்கள் மீது அக்கறையே இல்லாதவர்கள்

எல்லாமாக உலகத்தில் ஆளும் வர்க்கம் என்றொரு பிரிவினரும் ஆளப்படுபவர்கள் என்றொரு இன்னொரு பிரிவினரும் உள்ளனர் என்பதை மார்க்ஸ் ஏங்கெல்ஸ், லெனின் போன்ற சமூகத்தின்மீது சோசலிசப் பார்வை கொண்ட தலைவர்கள் அன்றே கூறிவைத்தார்கள். ஒரு தேசத்திலோ அனறி உலகத்தின் எந்த மூலையிலோ நசுக்கப்படும் இனங்களுக்கு சுய நிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் என்று எழுத்திலும் நடைமுறையிலும் சிந்தித்து வலயுறுத்தியவர்களும் அவர்களே. எனினும் உலகின் வலிமையான சோசலிச நாடாக விளங்கிய ரஸ்யாவின் சோசலிச தளத்தை அழிப்பதில் முக்கிய கவனமெடுத்த அமெரிக்காவும் அதன் சார்பு நாடுகளும் இன்றுவரை சோகலிசக் கொள்கைகள் உலகின் எந்த மூலைக்கும் பரவிடக் கூடாது என்பதில் கவனமாக உள்ளன. இதன் தாக்கம் எமது இலங்கையிலும் தொடர்ந்த வண்ணம் உள்ளதை மக்கள் அறிந்திருக்கா விட்டாலும் ஆட்சியில் அமர்ந்திருப்பவர்களும் ஆட்சியில் அமரத் துடிப்பவர்களும் கவனித்த வண்ணம் உள்ளார்கள்.

சிறுபான்மை இனங்களின் அரசியல் தீர்விற்கு அவர்கள் வாழும் நாட்டுக்குள்ளேயே சுயநிர்ணய உரிமைகளைக் கொண்டவர்களாய் வாழ சட்டங்களின் மூலம் வழி செய்யப்பட வேண்டும் என்பது நியாயமான ஒன்றாகத் தெரிந்தாலும் அதை நடைமுறைப்படுத்த ஆளும் அரசியல் தலைவர்கள் என்றும் சிந்திப்பதே இல்லை. இதனால் சிறுபான்மை இனங்களின் பிரச்சனைகள் நீறு பூத்த நெருப்பாக எரிந்த வண்ணமே உள்ளன.

உலகில் அரசியல் நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள சிறுபான்மை இனங்கள் பெரிதாக நம்பும் ஐக்கியநாடுகள் சபையோ அன்றி அந்த அமைப்பின் கீழ் வரும் மனித உரிமைகளுக்கான அமைப்போ சிறுபான்மையினரின் பிரச்சனைகளை ஏமாற்றும் நோக்கோடு கையாளுகின்றனவே தவிர அவர்களின் பிரச்சனைகள் அல்லது வேண்டுகோள்கள் தீர்க்கப்பட வேண்டும் என்ற அக்கறையோடும் இதய சுத்தியோடும் செயற்படுபவையாக இல்லை என்பது தற்போது ஈழத் தமிழர்களின் விடயத்திலும் குறிப்பாக தற்போது "எரயும்" பிரச்ச்னையாக உள்ள "செம்மணி புதைகுழிகள் விவகாரத்திலும் நன்கு புலப்படுவதனால் தமிழர்களாகிய நாம் புலம்பிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் தமிழ்த் தலைவர்களோ தங்கள் பதவிகளைத் தக்கவைத்துக் கொள்வதற்காக "போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

இன்றைய முரண்பாட்டில் சிறுபான்மைச் சமூகங்களின் எதிர்ப்பரசியலானது எப்போதும் போலவே ஆளும் அரசுக்கெதிரான கட்சிகளுக்குப்பின்னும் மற்றும் பெரும்பான்மைச் சமுதாயத்தின் ஜனாதிபதிகளின் வழியில் பிளவுபட்டு நிற்கும் இன அடையாளங்கள் வெளிப்பட்டு நிற்கும் புள்ளியில் மேற்குலக-ஆசிய மூலதனத்தின்பின் அணிவகுக்கும் சிங்கள-தமிழ் ஆளும் வர்க்கம், இலங்கையில் ஜனநாயகத்தை மறுத்து நிற்கும் தெரிவில் இலங்கையின் அரசியல் எதிர்காலம் சிறுபான்மை இனங்களை வேட்டையாடப்போகிறதென்பதற்கு உதாரணமாக பல விடயங்கள் எமது கண்களுக்கு முன்பாகவே இடம்பெறுகின்றன

குறிப்பாகச் சிங்கள இனவாதத்தாலும்-ஒடுக்குமுறையாலும் தொடர்ந்து பாதிக்கப்படும் இலங்கைச் சிறுபான்மையினங்கள் தம்மைத் தொடர்ந்து பலியாக்கும் அரசியலைத் தத்தமது தலைவர்களதும்-கட்சியினதும் நலனுக்கான தெரிவின்வழி கைவிட்டவர்களாகவே தங்கள் இருப்பை தொடர்கின்றனர.

இவ்வாறான நிலையில் புலம் பெயர் தமிழர்களும் அமைப்புக்களும் தாயகத்தில் பாதிக்கப்படும் மக்களுக்கு அரணாக விளங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டாலும் அவையும் ஆரோக்கியமானதாக இல்லை என்பதே வெளிச்சமாகத் தெரிகின்றது. இவ்வாறான நிலையில் செம்மணி விவகாரத்தை வெற்றிகரமாகக் கையாளும் "கைதேர்ந்தவர்களின்" பங்களிப்பு ஈழத்தமிழர்களுக்கு தற்போது அவசியமான தொன்றாக விளங்குகின்றது.

Magha



Val Morin
முருகன் தேர் தரிசனம்
July 19 & 20
(Saturday & Sunday)
Scarborough – Ajax and Markham selected stops
Hotel + AC Bus – Only 199 CAD per person
For Tickets: Tam 416-317-0052 / 647-821-7895



வல்மொறின் முருகன் ஆலய வருடாந்த தேர் உற்சவத்திற்கான விசேட சொகுசு பஸ் சேவை - TORONTO வில் இருந்து.....
யூலை 19ம் 20ம் திகதிகளில் சனி ஞாயிறு தினங்களில் ஹோட்டல் மற்றும் சொகுசு பஸ் கட்டணங்கள் 199.00 டாலர்கள் மட்டுமே.
பக்தர்ளை ஏற்றும் இடங்கள்: Ajax-Markham- Scarborough-Vaughan-Etobicoke-Brampton ஆகியனவாகும் .பயணச் சீட்டுகளுக்கு அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்: 416.317.0052 / 647.821.7895

Sapphire Banquet & Catering

Specializing in Videography & Photography

- Anniversary Party - Birthdays
- Graduation Party
- Bridal Shower - Engagement - Wedding Showers

SHIVA SUBRAMANIAM (647) 406-4868

Space for Rent

நடனம் பயில்வதற்கு வாடகைக்கு இடம் உண்டு. (பழைய தமிழ்ப் பூங்கா இருந்த இடம் - மார்க்கம்)
5 வயதிற்கு மேற்பட்டோருக்கான இசை வகுப்புக்கள் நடைபெறுகின்றன. (ஓகன், கிற்றார், றம்) ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம்
Raj - (416) 454-1893

இலங்கை செய்திகள் Sri Lanka News

# காலம் தாழ்த்தப்படும் அனைத்து விசாரணைகளும் துரிதமாக்கப்பட வேண்டும் என அரச சார்பற்ற இணையங்களின் தலைவர் சுகிர்தராஜ் வலியுறுத்து!

நிகழ்ந்த அல்லது நடைபெறும் குற்றங்களுக்கான சட்டங்கள் இறுக்கமாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்பதுடன் காலம் தாழ்த்தப்படும் புதைகுழிகள் உள்ளிட்ட விசாரணைகளையும் விரைவுபடுத்தி பாதிக்கப்பட மக்களுக்கு தீர்வை வழங்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அரச சார்பற்ற இணையங்களின் தலைவர் சுகிர்தராஜ் வலியுறுத்தியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் 12ம் திகதி சனிக்கிழமையன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் - எமது இணையம் 22 அமைப்புக்களை ஒன்றிணைத்து மனித உயிர்களின் பாதுகாப்பு அதற்காக குரல் கொடுத்துவரும் ஒன்றாகும்.

தற்போது வடக்கில் பல மனித அவலங்கள் நிகழ்த்தப் படதற்கான புதைகுழிகள் இனங்காணப்பட்டு அவை அகழப்படு அதிகளவான மனித என்புக்கூடுகள் மீட்கப்புள்ளன.




இது மிகப்பெரும் மனித உயிர் சார்ந்த விடையமாகும். எமது ஒன்றியம் கடந்த காலம் முதற்கொண்டு இன்றுவரை மனித உரிமைகள் பாதுகாப்பு சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்பை வலியுதுத்தி குரல் கொடுத்து அரசுகளுக்கு பெரும் அழுத்தை கொடுத்து வரும் அமைப்பு எந்த ரீதியில் தற்போதைய பேசுபொதுளான மனித புதைகுழி விவகாரத்துக்கு உடன் விசாரணை மேற்கொடு நியாயம் கிடைக்க செய்ய வேண்டும் என வலியுறுத்துகின்றோம்.

அத்துடன் அண்மையில் கொழும்பில் மர்மமான முறையில் இறந்த பாடசாலை மாணவியின் மரணம் தொடர்பிலும் விசாரணைகள் செய்யப்படு உண்மை வெளிக்கொண்டுவரப்பட வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றோம் என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




# பாடசாலை செல்லும் மாணவர்களிடையே ஸ்மார்ட் போன் பாவனையை தடை செய்தல் தொடர்பாக ஜனாதிபதிக்கு கடிதம்!

பாடசாலை செல்லும் மாணவர்களிடையே ஸ்மார்ட் போன் பாவனையை தடை செய்ய வேண்டும் எனக்கோரி வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினரால் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, இந் நாட்டில் தற்பொழுது புகைப்பொருள் பாவனை குறைவடைந்து இருப்பதை காணக் கூடியதாகவுள்ளது. ஆனால் போதைப்பொருள் பாவனை அதிகரித்து செல்வதை காணக் கூடியதாகவுள்ளது. இதனை கட்டுப்படத்துவதற்கு நாம் பாடசாலை மட்டத்திலும் கிராமங்களிலும் செயற்பட்டு வருகின்றோம். ஆனால் போதைப் பாவனை குறைவடைவதை காணக் கூடியதாக தெரியவில்லை. இதனால் கூடுதலாக பாதிப்படைவது இளம் சந்ததியினர் ஆவார் குறிப்பாக மாணவர் சமுதாயம் ஆகும்.

மேலும் இப்படி இருக்கும் பொழுது ஒரு படி மேலாக தற்பொழுது மாணவர்களிடையே ஸ்மார்ட் போன் பாவனையும் காணக் கூடியதாக உள்ளது. இந்த பாவனையை பாடசாலை மாணவர்கள் மட்டில் கட்டுப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். தாங்கள் சிறிலங்காவை துப்பரவு செய்ய முன் வந்ததை மனதார பாராட்டுகின்றோம். இதனைப் போல் ஸ்மார்ட் போன் பாவனையை மாணவர் களிடையே துப்பரவு செய்ய வேண்டும். அதற்கான சில ஆலோசனைகளை முன்வைக்கின்றோம். அவையாவன:

1. பொது இடங்களில் புகைப்பொருள் பாவித்தால் தண்டிக் கப்படுகின்றார்களோ அதே போல் பாடசாலை செல்லும் மாணவர்கள் 18 வயதிற்கு உட்பட்டவர்கள் ஸ்மார்ட் போன் பொது இடங்களில் பாவித்தால் தண்டிக்கப்பட வேண்டும்.

2. குறிப்பிட்ட மாணவர்கள் வீட்டில் ஸ்மார்ட் போன் பாவிப் பதனை கண்டால் மாணவர்களின் பெற்றோர்களை தண்டிக்க வேண்டும்.

3. பிரத்தியேக வகுப்பு நடாத்தும் ஆசிரியர்கள் போன் மூலம் வகுப்பு எடுத்தால் அந்த ஆசிரியரை தண்டிக்க வேண்டும்.

போன் பாவனையை மாணவர்களிடையே தடை செய்ய வேண்டும் இதற்கு காரணம் பெற்றோருக்கு தெரிந்த விடயங்கள் எல்லாம் இந்த போன் மூலம் மாணவர்கள் அறிகின்றார்கள். ஆகவே போன் பாவனையை தடை செய்ய வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் வழிபாடு. விரைவில் நிரந்தர தீர்வு

## அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு!




பலாலி கிழக்கு இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தை பொதுமக்கள் வழிபாடு செய்வதற்கான நிரந்தர தீர்வினை இம்மாத இறுதிக்குள்பெற்றுக் கொடுப் பதற்கு எதிர் பார்ப்பதாக யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவரும் கடற் தொழிலில் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தை முழுமையாக பொதுமக்கள் வழிபடுவதற்கான ஏற்பாடுகள் ஏன் மேற்கொள்ளப்படவில்லை என அவரிடம் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், எமது அரசாங்கம் பொறுப்பேற்ற பின் பல தசாப்த காலமாக பொதுமக்களின் பாவனைக்கு வழங்கப்படாமல் இருந்த யாழ். பலாலி வீதியை பொது மக்களின் பாவனைக்காக திறந்து விட்டோம்.

அதேபோன்று பலாலி கிழக்கு இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தை முழுமையாக பொதுமக்கள் சென்று வழிபடக்கூடிய வகையில் எமது அரசாங்கம் இம் மாத இறுதிக்குள் நடவடிக்கை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

ஏனெனில் குறித்த ஆலயம் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் பல தசாப்த காலமாக சிக்குண்ட ஆலயமாக காணப்படுகின்ற நிலையில் அதனை உரிய முறையில் மக்களிடம் கையளிக்க வேண்டும்.

எமது அரசாங்கத்தை பொறுத்தவரையில் எந்த ஒரு இனத்தினுடைய வழிபாட்டு உரிமையையும் புறந்தள்ளும் விதமாக செயற்படும் அரசாங்கம் கிடையாது.

ஆகவே குறித்த ஆலயத்தை முழுமையாக மக்கள் பாவனைக்கு கையளிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் இடம்பெற்று வருகின்ற நிலையில் விரைவில் அதனை மக்களிடம் முழுமையாக கையளிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை மாணவியின் வரலாற்றுச் சாதனை!

வெளியாகிய க.பொ.த சாதாரண பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய மாணவி ஒருவர் வரலாற்று சாதனை புரிந்துள்ளார்.

ஜ.நிரோஜா என்ற குறித்த மாணவி பாடசாலை வரலாற்றில் க.பொ.த. (சா/தர) ப் பரீட்சையில் முதல் முறையாக 9A பெற்று சாதனை படைத்துள்ளார்.



9A பெற்று வரலாற்றுச் சாதனை படைத்த மாணவிக்கு அதிபர் திரு. பா.பாலசுப்பிரமணியம் ஊக்குவிப்புத் தொகையாக ஒருதொகை பணப்பரிசில் வழங்கி கௌரவித்தார்.

குறித்த பாடசாலையானது பொருளாதார ரீதியாக நலிவுற்ற மாணவர்களும் கல்வி கற்கும் பாடசாலையாக காணப்படுகிறது.

மேலும், அதே பாடசாலை மாணவர்கள் பெற்ற சிறந்த பெறுபேறுகள் வருமாறு:

த.பிரணவி 7ஏ 2பி
பு.தேனுஜன் 6ஏ பி 2சி
செ.ஆதீசன் ஏ 3பி 4சி எஸ்
சி.சியானா ஏ 4பி 3சி எஸ்
ஜீ.கலையரசன் ஏ 2பி 3சி 2எஸ்

# பளையில் குடும்பஸ்தர் மீது புலனாய்வாளர்களால் தாக்குதல்



14ம் திகதி திங்கட்கிழமை அன்று மாலை பளை வண்ணான்கேணி பகுதியை சேர்ந்த திருநாமம் சிறிதரன் காந்தன் எனும் குடும்பஸ்தர் தாக்கப்பட்டு காயங்களுக்கு உள்ளான நிலையில் பளை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், அருள்தாஸ் சனிஸ்ரன் எனும் புலோப்பளை பகுதியை சேர்ந்த இளைஞர் தனது சமூக வலைத்தளங்கள் ஊடாக தடை செய்யப்பட்ட விடுதலைப்புலிகளை மீள உருவாக்க முயற்சிப்பதாக விசாரணைக்கான அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

குறித்த புலோப்பளை பகுதியை சேர்ந்த இளைஞரும், காயங்களுக்குள்ளான வண்ணான்கேணி பகுதியை சேர்ந்த இளைஞரும் நண்பர்களாக இருந்திருக்கின்றார்கள்.

இந்த நிலையில் மேற்கூறிய அருள்தாஸ் சனிஸ்ரன் எனும் நபரை விசாரணைக்கு அழைத்துள்ளனர். இந்த நிலையில் அருள்தாஸ் சனிஸ்ரன் தலைமறைவாகியுள்ளார்.

இந்த நிலையில் அவரின் நண்பர் தொடர்பான தகவல்களை வண்ணான்கேணி இளைஞரிடம் கேட்டு விசாரித்துள்ளனர்.

அவர் தொடர்பான தகவல்களை விசாரிப்பதற்காக அழைத்த வேளை அவர் மறுக்கவே குறித்த இளைஞரை பொலிஸ் என அடையாளமிடப்பட்ட மேல் சட்டை அணிந்திருந்த 4 நபர்கள் பலாத்காரமாக மோட்டர் சைக்கிளில் ஏற்றி சென்றுள்ளனர்.

இந்த நிலையில் இடையில் வைத்து குறித்த இளைஞர் மீது தாக்குதல் மேற்கொண்டு இடையிலேயே இறக்கி விட்டு சென்றதாக காயங்களுக்கு உள்ளான இளைஞன் தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பளை பொலிசார் மேற்கொண்டு வருகின்றன.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மட்டக்களப்பில் இனங்களுக்கிடையே சம உரிமைகளை உறுதி செய்ய கோரி எதிர்ப்பு பதாதையில் கையொப்பமிடும் போராட்டம்

கனகராசா சரவணன்

காணாமல் ஆக்கப்பட்ட அனைவருக்கும் நீதி வழங்கு, இன்னொரு அடக்குமுறைச் சட்டங்கள் வேண்டாம், பயங்கரவாத தடைச் சட்டத்தை ரத்துசெய் அனைத்து தேசிய இனங்களுக்கும் சம உரிமைகளை உறுதி செய்யும் அரசியலமைப்பிற்காகப் போராடுவோம் என்ற தலைப்பில் எதிர்ப்பு பதாதையில் கையொப்பமிடும் போராட்டம் ஒன்றை சம உரிமை இயக்கம் மட்டக்களப்பு பஸ்தரிப்பு நிலையத்தில் 12ம் திகதி அன்று சனிக்கிழமை ஆரம்பித்து வைத்தனர்.

மாவட்ட இணைப்பாளர் கிருபாகரன் தலைமையில் எதிர்ப்பு பதாதையில் கையொப்பமிடும் போராட்டம் அன்று 12ம் திகதி சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு மட்டக்களப்பு பிரதான பேருந்து தரிப்பிடத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது இதன் போது ஈரோஸ் ஜனநாயக முன்னணி கட்சியின் தலைவர் இராஜேந்திரா, சம உரிமைகள் இயக்க உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு எதிர்ப்பு பதாதையில் கையொப்பமிடும் நடவடிக்கையை ஆரம்பித்து வைத்து துண்டு பிரசுரங்களை விநியோகித்தனர்.

இதன் போது அங்கு அதிகமான பொதுமக்கள் ஆர்வமாக சென்று இந்த எதிர்ப்பு பதாதையில் கையொழுத்திட்டமை குறிப்பிடத்தக்கது.





# மட்டக்களப்பு மாநகரசபை அமர்வில் செம்மணி படுகொலைக்கு கண்டனமும் சர்வதேச நீதியான விசாரணை கோரி பிரேரணை நிறைவேற்றமும்

## தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் உட்பட 34 உறுப்பினர்களும் ஏக மனதாக ஆதரவு வழங்கி நிறைவேற்றப்பட்டது



செம்மணி படுகொலைக்கு கண்டனமும் சர்வதேச நீதியான விசாரணை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும் என கோரி மட்டக்களப்பு மாநகரசபை அமர்வில் தமிழரசு கட்சி உறுப்பினர் துரைசிங்கம் மதன் 17ம் திகதி அன்று வியாழக்கிழமை கொண்டு வந்த பிரேரணையினை தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் உட்பட 34 உறுப்பினர்களும் ஏக மனதாக ஆதரவு வழங்கி நிறைவேற்றப்பட்டது.

மட்டு மாநகர சபையின் இரண்டாவது சபை அமர்வு மாநகரசபை முதல்வர் சிவம் பாககியநாதன் தலைமையில் இடம்பெற்றது இதன் போது தமிழரசு கட்சியின் உறுப்பினர் துரைசிங்கம் மதன் யாழ் செம்மணி புதைகுழி தொடர்பில் இடம்பெற்ற படுகொலைக்கு கணடனம் தெரிவித்தும் அதற்கு சர்வதேச நீதி விசாரணை வேண்டும் என கோரி பிரேரணை ஒன்றை கொண்டுவந்து உரையாற்றினார்.

இதன்போது அவர் சகோதரி கிரிசாந்தினி படுகொலையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த செம்மணி படுகொலை தமிழ் மக்களை திட்டமிட்டு படுகொலை செய்யும் ஒரு அங்கமாக பார்க்கின்றேன் சோமரத்தின ராஜபக்ஷ என்ற சிங்கள இராணுவத்தைச் சேர்தவர் சர்வதேச மன்னிப்பு சபையின் அழுத்தத்தின் காரணமாக கைது செய்யப்பட்ட அவர் லழங்கிய வாக்கு மூலத்தின் அடிப்படையில் செம்மணி படுகொலை தெரியவந்து புதைகுழி தோண்டப்பட்டது ஆனால் இடைப்பட்ட காலத்தில் அது நிறுத்தி வைக்கப்பட்டது.

அந்த நேரத்தில் புதைக்கப்பட்ட சடலங்களின் எச்சங்களை தோண்டி எடுத்து எரிக்கப்பட்டபோது அங்கு புகை மண்டலம் வந்ததையடுத்து பொதுமக்கள் தெரிவித்த தையடுத்து மீண்டும் சர்வதேச மன்னிப்புச் சபையின் அழுத்தம் காரணமாக தோண்டப்பட்டு இதுவரை சிறுவர்கள் உட்பட 65 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளது.

இராணுவத்தைச் சேர்ந்த சோமரத்தின ராஜபக்ஷவின் உயர் அதிகாரிகளின் பணிப்புக்கு அமைய 400க்கு மேற்பட்ட எங்கள் உறவுகளை அழித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே இந்த படுகொ-லைகளைப் பற்றி ஆராயப் போனால் மட்டக்களப்பிலே சத்துருக்கொண்டான், மிருசுவில் படுகொலை என ஏகப்பட்ட படுகொலைகள் இடம்பெற்றுள்ளன.

இந்த மிருசுவில் படுகொலையில் சுனில் ரத்நாயனக்கா என்ற இராணுவ சிப்பாய் 8 பேரை கொலை செய்து 9 வது நபரை கொலை செய்யுமற்பட்டபோது அவர் தப்பி ஒடி வெளிக் கொண்டுவந்ததில் அந்த இராணுவச்சிட்பாய் கைது செய்யப்பட்டு 5 ஆண்டு சிறைத்தண்டனை வழங்கிய அவரை முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அவரை பொது மன்னிப்பில் விடுதலை செய்தார்.

எனவே எமது இனத்தை திட்டமிட்டு அழிக்கும் எவரையும் நாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை எனவே இந்த தமிழ் மக்கள் மீதான படுகொலை தொடர்பில் எதிர்கால இளம் சமூதாயம் அறிந்து கொள்ள வேண்டும்

இதனடிப்படையில் தற்போதைய அரநு இந்த செம்மணி படுகொலை தொடர்பான விசாரணையை முன்னெடுக்கப்பட வேண்டும் அதேவேளை இந்த விசாரணை சர்வதேச கண்கானிப்புடன் இடம்பெறவேண்டும் என்பதுடன் இந்த படுகொலைக்கு கண்டனம் தெரிவிப்பதாக பிரேரனையை முன்வைத்து உரையாற்றினார்.

இதனை தொடர்ந்து பல உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்து உரையாற்றியதுடன் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் 11 பேர் உட்பட 34 உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்ததையடுத்து இந்த பிரேரணை நிறைவேற்றப்பட்டது.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் ஊடகக் கழகத்தின் ஏற்பாட்டில் இதழ் வெளியீடும் ஊடகக் கண்காட்சியும்!

பு. கஜிந்தன்



வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் "நிஜமும் நிழலும்" இதழ் வெளியீட்டு விழாவும், ஊடகக் கண்காட்சியும் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் விருந்தினர்களுக்கு மலர்மாலை அணிவித்து, அவர்கள் பாரம்பரிய மயிலாட்டம், குதிரையாட்டத்துடன் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து இறை வணக்கம் இசைக்கப்பட்டு, மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது. பின்னர் வரவேற்பு நடனம், தலைமையுரை, விருந்தினர்களின் உரைகள் என்பன இடம்பெற்றன.

அதன்பின்னர் "நிஜமும் நிழலும்" இதழின் முதற் பிரதியை பாடசாலையின் பதில் அதிபர் திருமதி. வதனி தில்லைச்செல்வன் வெளியிட்டு வைக்க அதனை பிரதம அதிதியாக கலந்துகொண்ட யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப் பீட பீடாதிபதி எஸ்.ரகுராம் பெற்றுக்கொண்டார்.






இதழ் வெளியீட்டு நிகழ்வுகள் நிறைவுற்ற பின்னர் ஊடக கண்காட்சி ஆரம்பமானது. கண்காட்சி கூடத்தை பிரதம விருந்தினர் நாடா வெட்டி சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார். அதன்பின்னர் நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் கண்காட்சியை பார்வையிட்டனர்.

ஊடகக் கழகத்தின் ஏற்பாட்டில், கல்லூரியின் பதில் அதிபர் திருமதி. வதனி தில்லைச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப் பீட பீடாதிபதி எஸ்.ரகுராம் பிரதம அதிதியாகவும், வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி. பிரேமலொஜி சுதேஷ்குமார் சிறப்பு அதிதியாகவும், சிரேஷ்ட பத்திரிகையாளர் தர்மினி பத்மநாதன் கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பித்ததுடன், இதில் ஊடகத்துறை ஆசிரியர் திரு. அனுராஜ், ஆசிரியர்கள், மாணவர்கள், அயற் பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



# வடக்கு ஆளுநருக்கும் இலங்கைக்கான கனேடியத் தூதுவருக்கும் இடையே இடம்பெற்ற சந்திப்பு!

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களுக்கும், இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஷுக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் 14ம் திகதி திங்கட்கிழமை காலை இடம்பெற்றது.

இலங்கையிலிருந்து அடுத்த மாதத்துடன் தனது பணியை நிறைவு செய்து திரும்பவுள்ளதாக கனேடியத் தூதுவர் ஆளுநரிடம் தெரிவித்தார். இதுவரை அவர் வழங்கிய ஒத்துழைப்புக்கள் மற்றும் கனேடிய அரசாங்கம் கடந்த காலங்களில் மேற்கொண்ட உதவிகளுக்கு ஆளுநர் நன்றி தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் குறிப்பாக வன்னிப் பிராந்தியத்தில் காணி தொடர்பான பிணக்குகள் அதிகளவில் உள்ளமையை சுட்டிக்காட்டிய ஆளுநர், போர் காரணமாக ஆவணங்கள் அழிவடைந்தமை இதற்கு பிரதான காரணமாக உள்ளதாகத் தெரிவித்தார்.

வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் என்பன கடந்த காலங்களில் இங்குள்ள அதிகாரிகளுக்குத் தெரியாமல் கூகுள் வரைபடத்தின் உதவியுடன் காணிகளை வர்த்தமானியில் பிரசுரித்தமையால் எழுந்துள்ள சவால்களை ஆளுநர் எடுத்துக்கூறினார். இதற்கு தற்போதைய அரசாங்கம் தீர்வு காண்பதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகளையும் ஆளுநர், கனேடியத் தூதுவருக்கு விவரித்தார். இந்தத் திணைக்களங்களால் வடக்கு மாகாணம் மாத்திரமல்ல ஏனைய பிரதேசங்களிலும் பாதிப்புக்கள் உள்ளதாக தாம் அறிந்திருப்பதாக கனேடியத் தூதுவர் பதிலளித்தார்.

2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வடக்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத் திட்டங்கள் இடைநடுவில் உள்ளமையால் மக்கள் இன்னமும் பாதிப்பை எதிர்கொள்கின்றனர் எனச் சுட்டிக்காட்டிய ஆளுநர், அந்த மக்கள் அதனை முழுமைப்படுத்துவதற்கு உதவிகள் தேவை எனக் கோரிக்கை விடுத்தார். அதேபோல பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உற்பத்தி முயற்சிகளில் ஈடுபடுகின்றன என்றும் அவர்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுப்பதற்கான உதவிகளை தேவை எனவும் கனேடியத் தூதுவருக்கு சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாணத்தில் வேலை வாய்ப்பு சவாலாக உள்ளது என்றும் இதற்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கிலும் விவசாய மற்றும் கடல் உற்பத்திப் பொருட்களை பெறுமதி சேர் உற்பத்திப் பொருட்களாக மாற்றும் தொழிற்சாலைகளை இங்கு அமைப்பதற்கு முதலிடுவதற்கு கனேடிய வாழ் மக்களை ஊக்குவிக்க வேண்டும் என்றும் ஆளுநர் கோரிக்கை முன்வைத்தார்.

வடக்கில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ள முதலீட்டு வலயங்களின் முன்னேற்றம், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய விரிவாக்கம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் கனேடியத் தூதுவர் கேட்டறிந்து கொண்டார்.




இந்தச் சந்திப்பில் ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன் மற்றும் ஆளுநரின் இணைப்புச் செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் சிறந்த பெறுபேறுகள்!

அண்மையில் வெளியாகிய க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் 4 மாணவர்கள் 9ஏ சித்திகளை பெற்று சாதனை படைத்துள்ளனர்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மாணவர்கள் பெற்றுக் கொண்ட சிறந்த பெறுபேறுகள் வருமாறு:

யோகேந்திரன் தருசன் 9ஏ, ஜூட்நிரோசன் தரணிகா 9ஏ, மனோரஞ்சனராசா துவாரகா 9ஏ, ரமணன் யாழினி 9ஏ, கிருஷ்ணமூர்த்தி நிருபா 8ஏ பி, சரவணபன் சிவகாமி 8ஏ பி, சிவாசன் குகாஜினி 7ஏ 2பி, விக்னேஷ்வரன் கோபிகா 7ஏ 2பி, ஜோர்ஜ் ஜெயபாலன் மெர்சி நித்திலா 7ஏ பி சி, சிவநீதன் சாருஜா 6ஏ 2பி சி, பரந்தாமன் தர்மிகா 5ஏ 3பி சி, மகாலிங்கம் கஜன் 5ஏ 3பி எஸ், ஜெயச்சந்திரன் ஜெனோசா 5ஏ 2பி 2சி, பேரின்பராசா பவிசன் 5ஏ பி 2சி எஸ், அருந்தவன் சரணியா 4ஏ 4பி சி, ரஜணிதரன் டனுஷா 4ஏ 3பி 2சி, புவனேஸ்வரன் சிவாஜெனி 4ஏ 2பி 3சி, சௌந்தரராசா துவாரகா 4ஏ 4சி எஸ்.



# சங்கானை கோட்ட முன்பள்ளி சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா!



சங்கானை கோட்ட முன்பள்ளி சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழாவானது 12-07-2025 அன்று சுழிபுரம் விக்டோரியா கல்லூரி மைதானத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

மேற்கத்தேய இசை வாத்தியங்கள் முழங்க விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டு, மங்கல விளக்கேற்றலுடன் விழா ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து மைதான நிகழ்ச்சிகள் நடைபெற்றது. பின்னர் பரிசில்கள் வழங்கல் இடம்பெற்று நன்றியுரையுடன் நிகழ்வானது நிறைவுற்றது.

சங்கானை கோட்டக்கல்வி முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் தலைவி திருமதி. ப.கிருஷ்ணவேணி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் ச.ஜயந்தன் கலந்து சிறப்பித்தார்.

இந்த நிகழ்வில் விருந்தினர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.





இலங்கை செய்திகள் Sri Lanka News

# அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் நினைவேந்தல் அனுஷ்டிப்பு!



பு. கஜிந்தன்

இலங்கையின் முதலாவது தமிழ் எதிர்க்கட்சி தலைவராக இருந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 36 ஆவது ஆண்டு நினைவு தினம் அண்மையில் யாழ். பண்ணாகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழர்களின் மூத்த அரசியல் தலைவரும் நாடாளுமன்றத்தின் முதலாவது தமிழ் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அ.அமிர்தலிங்கத்தின் 36 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று காலை வலி மேற்கு பிரதேச சபைக்கு முன்பாக உள்ள அமரரது உருவச் சிலையடியில் இடம்பெற்றது.

பண்ணாகம் கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வின்போது அமரரது உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு சுடரேற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. இதேவேளை அமிர்தலிங்கம் அறக்கட்டளை நிலையத்தின் ஏற்பாட்டில் மூளாயில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்திலும் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதில் அமரரின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.



இந்நிகழ்வில் வலி மேற்கு பிரதேசசபை கௌரவ தவிசாளர் ச.ஜயந்தன், பிரதேசசபை உறுப்பினர்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# பெரும்பான்மையின மக்களும் முஸ்லின் மக்களும் அதிகளவு வாழும் வட மத்திய மாகாண சபைக்கு செயலாளராக யாழ்ப்பாணத்தை சேர்ந்த பெணமணி ஒருவர் நியமிக்கப்பெற்றுள்ளார்!



அநுராக புரத்தை தலைநகராகக் கொண்ட வட மத்திய மாகாண சபைக்கு முதலாவது தமிழ் பெண் செயலாளராக யாழ்ப்பாணத்தை சேர்ந்த நிர்வாக சேவை அதிகாரியான சுபாஜினி மதியழகன் அவர்கள் னது கடமைகளை 14ம் திகதி அன்று திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாய் பிரதேச செயலாளராக கடமையாற்றிய சுபாஜினி நிர்வாக சேவை சிறப்பு தரத்துக்கு பதவி உயர்வு பெற்ற நிலையில் வட மத்திய மாகாண சபைக்கு செயலாளராக நியமிக்கப்பட்டார்.

பெரும்பான்மையின மக்களும் முஸ்லின் மக்களும் அதிகளவும் சிறிய தொகையில் தமிழ் மக்களும் வாழும் வட மத்திய மாகாணத்தில் ஒரு உயர் நிர்வாகப் பதவியில் இவ்வாறு நியமனம் பெற்ற சுபாஜினி அவர்களுக்கு பல்வேறு தரப்பினரும் தமது பாராட்டுகளை தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


# Thana Insurance Inc

## T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

## PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

## NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker

THANA INSURANCE Inc.



Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road , unit D218, Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# புலிகளின் குரல் நின்றது — ஆனால் அதன் ஓசை நிலைத்திருக்கும்: சத்தியா அவர்களின் மறைவு ஒரு வரலாற்றுப் பதிவாகும்

“அவரது குரலில் ஒலித்த ஒவ்வொரு செய்தியும், எமது விடுதலைக் கனவின் துடிப்பாக நம்மை நெஞ்சத்தில் நிழலாய் தொடந்தது. அந்தக் குரலின் ஓசை இன்னும் எம்செவிகளில் வாழ்கின்றது.”

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஊடகப் பிரிவில் பாரிய பங்கு வகித்த, புலிகளின் குரல் வானொலியின் முதன்மை அறிவிப்பாளராகப் பணியாற்றிய சத்தியா (சிவசுப்பிரமணியம் ஞானகரன்) அவர்கள் மாரடைப்பால் காலமான செய்தி, ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தையே துக்கத்தில் ஆழ்த்தியுள்ளது.

1990 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட புலிகளின் வானொலியின் முதலாவது ஒலிபரப்பில், “புலிகளின் குரல் செய்திகள் வாசிப்பவர் சத்தியா” என்று குரல்கொடுத்து வரலாற்றை தொடக்கமிட்டவர் இவரே.


அவர் வாசித்த ஒவ்வொரு செய்தியும், நமது விடுதலைப் போராட்டத்தின் உணர்வுகளை மக்கள் மனங்களில் ஊற்றியது. 1990 முதல் 2003 வரை புலிகளின் குரல் வானொலியில் செய்தி ஆசிரியராகவும் அறிவிப்பாளராகவும் பணியாற்றிய அவர், செய்திக்கு உரிய தூரத்தையும், அதன் தாக்கத்தையும், மக்கள் உணரக்கூடிய விதமாக குரலில் எடுத்துச் சொல்வதில் ஆசானாக விளங்கினார்.

### வானொலி குரலின் பின்னணி: ஒரு குரல், ஒரு தேசத்தின் கனல்

புலிகளின் குரலில் ஒலித்த செய்திகள், வெறும் தகவல்கள் அல்ல. அவை ஒரு தேசத்தின் உயிர்வலி, போராட்டத்தின் உணர்வு, சமூக நீதிக்காகப் பரித்த இரத்தத்தின் கனல். இவற்றை மக்களிடம் எடுத்துச் சென்று புலம்பெயர்ந்தத் தமிழர்களின் மனங்களில் நம்பிக்கையை நிலைநிறுத்தியவர் சத்தியா.






நிதர்சனம் நிறுவனத்தின் தயாரிப்பான “விடுதலைத் தீப்பொறி” எனும் தலைவரின் நேர்காணல் நிகழ்ச்சியின் குரல் வழங்குநராகவும், தலைநிமிர்வு 50 என்ற ஆவணப்படம் உட்பட பல ஆவணங்களின் பிரதான குரலாகவும், அவர் பணியாற்றியுள்ள வரலாறு மறக்க முடியாதது.

அதோடு, “சமகால பார்வை” நிகழ்ச்சிக்கு தொடர்ச்சியாக குரல் வழங்கியவர், விவசாயக் கருப்பொருள்களைக் கொண்ட “மண்முற்றம்” நிகழ்ச்சியை எழுதி, தொகுத்து, குரலளித்தவர், மேலும் மக்களின் உணர்வுகளை நேரடியாக பதிவு செய்த “ஊர் சுற்றும் ஒலிவாங்கி” நிகழ்ச்சியையும் நிகழ்த்தியவர்.

“காலச்சக்கரம்” எனும் வரலாற்றுத் தொடரை மறைந்த கலைஞர் சங்கநாதன் அவர்களுடன் இணைந்து எழுதி, தயாரித்து, குரலளித்ததன் வழியாக, விடுதலைப் போரின் வரலாற்றை ஒலி வடிவில் நிலைநிறுத்திய முக்கிய செயற்பாட்டாளராக அவர் விளங்கினார்.




### மாறாத பண்பும் - இடம் மாறினாலும் உறைபிறப்பாக இருந்தவர்

2003-ஆம் ஆண்டிலிருந்து ஊடகத்துறையிலிருந்து ஓய்வுபெற்று, ஆங்கிலப் பகுதி நேர ஆசிரியராகவும் பின்னர் முழுநேர ஆசிரியராகவும் பணியாற்றியிருந்தார்.

இடப்பெயர்வுக்கு முன்பாக, யாழ்ப்பாணத்திலும், பின்னர் முள்ளியவளையில், புலிகளின் குரல் வானொலி நிலையத்தில் பணியாற்றியிருந்த போது, தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களையும் இரண்டு முறை நேரில் சந்தித்து, மதிப்பளிப்பைப் பெற்றவர் என்ற பெருமையும் இவருக்குச் சொந்தம்.

சமீபத்தில் விபத்து காரணமாக காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், மாரடைப்பால் காலமானார்.

மே 16, 2009 இரவு வரை, எமது செவிகளில் ஒலித்த “புலிகளின் குரல்”, இப்போது நிஜமாகவே நின்றுவிட்டது.

### ஒரு குரல் மறைந்தது - ஒரு புரட்சி நிழலாய் தொடர்கிறது

சத்தியா அவர்களின் மறைவு, ஒரு ஊடகவியலாளர் இழப்பாக மட்டும் அல்ல.

அவர் ஒரு செய்தியாளராக இல்லாது, ஒரு புரட்சிகர இயக்கத்தின் குரலாக, மக்கள் உள்ளங்களில் வாழ்ந்தவர்.

அவர் வாசித்த ஒவ்வொரு செய்தியும், ஒரு தேசத்தின் நினைவாக ஒலிக்கிறது.

இந்தியத் தலைவர்கள், சர்வதேச வன்முறைகள், தமிழர்களின் பேரழிவுகள், அரசியல் மாற்றங்கள், அனைத்தையும் ஒரு எழுச்சிகரமான குரலில் மக்கள் செவிகளுக்குள் ஒலிக்கச் செய்தவர்.

சத்தியா என்ற மனிதர் மறைந்தாலும், அவருடைய குரல் எங்கள் மனங்களில் தொடர்ந்து ஒலிக்கும்.
அந்த ஒலி, ஒரு விடுதலைக்காக கொட்டிய உழைப்பின் சத்தம்.
அந்த குரல் ஒரு போராளியின் நெஞ்சத் துடிப்பு.
அந்த குரல், எப்போதும் “விடுதலை” என்பதற்கான மனக்கீதமாகவே இருக்கும்.

“குரல் நின்றது - கனல் தொடர்கிறது.”


**எழுதியவர்: ஈழத்து நிலவன் (14-07-2025)**

---




**Tamilthakaval.org**

**ஒரு இலவச சேவை -- A Free Service**



இவ் இணையத்தளம் உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழ் மக்கள் தங்களுடய உற்றார், உறவினர்களின் பிரிவுத் துயரச்செய்திகள், நினைவஞ்சலிகள் முதலியவற்றை எப்பொழுதும் ஏவ்வித சந்தாவுமின்றி இலவசமாகப் பிரசுரித்து அறிவித்தல் தரும் நோக்கத்தில் தாபிக்கப்பட்ட தொன்றாகும்.
மேலும் பல்வேறு முக்கிய செய்திகளைக்ககூட பகிர்ந்து கொள்ளும் வசதிகளும் இதில் தரப்பட்டுள்ளன.
செய்திகளைப் பிரசுரிப்பதற்கான விண்ணப்ப படிவமும், நிரப்புவதற்கான விதிமுறைகளும் விவரமாக இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.
உங்கள் வசதிக்கமைய செய்திகளை “info@tamilthakaval.org” என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.
மேலதிக தகவல்களுக்கு ‘1-866-300-1765’ என்ற தொலைபேசி இலக்கத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

இந்த இணையத்தளத்தை சில தொண்டர்கள் ஒரு சமூக சேவையாக கருதி பொறுப்புடன் நன்கு நடாத்தி வருகின்றார்கள். இவர்கள் இப்பணியை வெற்றிகரமாக தொடருவதற்கு ஈழத்தமிழர்களாகிய உங்களின் ஆதரவு மிகவும் இன்றியமையாதது. உங்களால் இயன்றவரை செய்திகளை உடனுக்குடன் தெரிவித்து இந்த இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு உதவி செய்து இச்சமூக சேவையை மேன்மேலும் மேன்மைபடுத்த உதவுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "விடுதலை பெருவிருட்சம் வேரூன்றி தளைத்திட ஒருகுவளை நீர் உவந்து உறவுகளை விடுவிப்போம்!"

**பு. கஜிந்தன்**



தமிழ் அரசியல் கைதியான விக்னேஸ்வரநாதன் பார்த்தீபன், 17 வயதில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் வாடிக் கொண்டிருக்கின்றார்.

பிள்ளையவனின் நீண்ட பிரிவுத்துயர் தாங்காது, தாய் தந்தை இருவரும் உயிர்நீத்த நிலையில், பெற்றவர்களது இறுதிச் சடங்குகளுக்கு ஒரு ஆயுள் தண்டனை கைதியாக கைவிலங்குடன் கொண்டுவரப்பட்டு சிதைகளுக்கு கொள்ளியிட்ட பின்பு மீண்டும் சிறைக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தார்.

பார்த்தீபனின் தாயாரான அமரர் விக்னேஸ்வரநாதன் வாகீஸ்வரி அம்மையார்



அவர்களின் மூன்றாமாண்டு நினைவேந்தல் நாளான இன்று, யாழ்ப்பாணம் - திருநெல்வேலியில் உள்ள அவரது இல்லத்தில், பார்த்தீபன் உட்பட்ட சக தமிழ் அரசியல் கைதிகள் உயிர்ப்புடன் விடுதலை பெற்று குடும்பங்களுடன் இணைய வேண்டுமென்ற பிரார்த்தனையுடன், நூதன போராட்டம் "குரலற்றவர்களின் குரல்" அமைப்பிரால் இன்றையதினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அதாவது, குடும்பத்தின் உற்ற உறவுகளை இழந்தும் பிரிந்தும் நீண்ட நெடுங்காலங்களாக அடிமைச்சிறை அனுபவித்துக் கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் உயிர்ப்புடனான விடுதலையை வலியுறுத்தும் முகமாக "விடுதலை பெருவிருட்சம் வேரூன்றி தைளைத்திட ஒரு குவளை நீர் உவந்து உறவுகளை விடுவிப்போம்..!" எனும் கருப்பொருளில், சமூக ஆர்வலர்களின் கரம் இணைத்து தொடர உள்ளனர்.

இப்போராட்டத்தில் நல்லெண்ணம் கொண்ட ஒவ்வொருவரும் தத்தமது வீடுகளில் இருந்து ஒரு குவளை தண்ணீரை பொதுக் குவளைக்கு உவந்தளிப்பதன் மூலம், நாட்டப்படும் "விடுதலைப் பெருவிருட்சம்" வேரூன்றி தளைத்திட உங்களது பங்களிப்பையும் அர்ப்பணிக்க முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய, இந்த மனிதநேயப் பணியில் இனம் மதம் மொழி கடந்து நல்லுள்ளம் கொண்ட அனைவரும் தம்மை இணைத்துக் கொள்ளவேண்டுமென "குரலற்றவர்களின் குரல்" அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# உடுவில் மகளிர் கல்லூரியின் மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு!




உடுவில் மகளிர் கல்லூரியின் மாணவமுதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு 15ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்றையதினம் அதிபர் ரொசானா மதுரமதி குலேந்திரன் தலைமையில் நடைபெற்றது.




மாணவ தலைவியாக செல்வி தருண-ியும், விளையாட்டுத் தலைவியாக செல்வி சுஜித்தாவும், சிரேஸ்ட மாணவ தலைவிகளாக செல்விகள் டிறோசினி, பதுமிதா, அபிஷா, கம்சத்வேணி ஆகியோரும், விடுதி தலைவியாக செல்வி புரட்சி தெரிவாகி சின்னம் சூட்டப்பட்டது. ஏனையவர்களுக்கும் அதிபரினால் சின்னங்கள் சூட்டப்பட்டன.

இங்கே காணப்படும் படங்கள் பாடசாலை வளாகத்தில் எடுக்கப்பெற்றவையாகும்.




# வள்ளுவன் வழி...!

**தூஉன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்.**

**(குறள் எண் 69)**

**பொருள்:**

ஒரு தாய் தன் குழந்தையைப் பெற்றெடுத்தபோது அடைந்த மகிழ்ச்சியைவிட, தன் குழந்தை நற்பண்புகளாலும், அறிவாலும், நல் ஒழுக்கத்தாலும் உயர்ந்து நிற்பதனை இந்த உலகம் பாராட்டுவதைக் கேட்கும்போது இன்னும் அதிகமாக மகிழ்வாள்.

ஒவ்வொரு பெற்றோரின் பெருங்கனவும் தங்கள் பிள்ளைகள் நன்முறையில் வாழ வேண்டும் என்பதே. ஒரு தாய் தன் குழந்தை பிறக்கும்போது "இது எனது பிள்ளை" என்று உரிமை கொண்டாடுகிறாள். பின்பு அந்தக் குழந்தை சான்றாண்மை பெற்று, உலகிற்குப் பயனுள்ள வகையில் மாறும் போது "இது எங்கள் பிள்ளை" என்று இந்த உலகம் கொண்டாடுகிறது. அத்தகைய தருணமானது ஒரு தாயின் வாழ்நாள் சாதனையாகிறது.


பிள்ளைகளை நல்ல மக்களாக உருவாக்க வேண்டும், அவர்களின் வளமான எதிர்காலத்திற்குத் தயார்படுத்த வேண்டும் என்ற பெரும் பொறுப்புகளையும், பிள்ளைகளின் உன்னதமான வாழ்க்கையே பெற்றோர்க்குப் பெருமை சேர்க்கும், என்பவை போன்ற அற்புதமான விடயங்களையும் தெய்வப்புலவர் திருவள்ளுவர் இக்குறள் பாவினூடாக உலகிற்கு உணர்த்தியுள்ளார். ஆகவே நல்லொழுக்கமும், அறிவும், நற்பண்புகளும் இணையும்போதே ஒருவரின் பிறப்பு அர்த்தமுள்ளதாகி, சான்றாண்மையால் மேன்மையுற்று முழுமை பெறுகிறது. அர்த்தமுள்ள மனிதர்களே ஒரு சமூகத்தின் நல்ல குடிகளாவார். ஒரு சமூகத்திற்கு நல்ல குடிமக்களின் அவசியம் என்பது வெறும் எதிர்பார்ப்பு மட்டுமல்ல. அது மிகப் பெருந்தேவை. ஆகவே பெற்றோரின் ஈடிணையற்ற தியாகத்திற்குப் பிள்ளைகள் செய்யக்கூடிய கைம்மாறு என்பது தன் பெற்றோரைப் பெருமைப்படுத்தும் வகையிலும், உலகு பயனுறும் வகையிலும் மேன்மையான வாழ்க்கையை வாழ்வதேயாகும்.



**வாழ்க திருவள்ளுவம்..!**

**திருமதி. ஜோதி ஜெயக்குமார்**
(B.Com, MA)
**வள்ளுவன்வழி உலக இணையப்பள்ளி - கனடா.**
Jothy.Thirukural@gmail.com

# மனித உரிமைகள் ஆணையாளருடைய வருகைக்குப் பின்னரான அரசியல்



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

**செ**ம்மணியில் எடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள் தாங்களாக நீதிமன்றம் போகப்போவதில்லை. அவற்றை தமிழ் மக்கள்தான் நீதிமன்றத்திற்கு கொண்டு போக வேண்டும். குறிப்பாக ஐநா அதனைச் செய்யும் என்று எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால் அண்மையில் நாட்டுக்கு வருகை தந்த ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் தனது வருகையின் முடிவில் கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்த உத்தியோகபூர்வமான கருத்துக்கள் தமிழ் மக்களுக்கு உற்சாகமூட்டுபவைகளாக இல்லை. உள்நாட்டு விசாரணை பொறிமுறையை வெளிநாட்டு உதவிகளோடு மேம்படுத்துவது தொடர்பாகத் தான் அவர் அங்கு பேசியிருந்தார்... "முடிவாக இது நாட்டின் (இலங்கையின்) பொறுப்பாகும், மேலும் இந்த செயல்முறை தேசிய அளவில் சொந்தமானது என்பது முக்கியம். அதோடு, இது சர்வதேச வழிமுறைகளால் பூர்த்தி செய்யப்பட்டு ஆதரிக்கப்படலாம்." என்று அவர் கூறினார்.

அதுபோலவே அவருடைய வருகையின் பின்னணியில் கொழும்பில் உள்ள ஐநா வதிவிடப் பிரதிநிதி "அததிரண" காணொளி ஊடகத்துக்கு தெரிவித்த கருத்துக்களும் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுபவைகளாக இல்லை. எனவே இந்த விடயத்தில் ஐநா தலையிட்டு தமிழ் மக்களுக்கு நீதியை பெற்றுத் தரும் என்று தமிழ்மக்கள் காத்திருக்க முடியாது. அதற்காக ஐநாவை விரோதிக்கவும் தேவையில்லை. நீதிக்கான போராட்டத்தில் ஐநாவை தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை நோக்கி உந்தித்தள்ளும் விதத்தில் தமிழ் மக்கள் ஐநாவை நோக்கியும், ஐநாவில் முடிவெடுக்கும் அதிகாரத்தோடு உள்ள நாடுகளை நோக்கியும் மேலும் கடுமையாக உழைக்க வேண்டியிருப்பதைத்தான் ஐநா மனித உரிமைகள் ஆணையாளருடைய இலங்கை வருகை தமிழ் மக்களுக்கு உணர்த்தியிருக்கிறது.

இந்த விளக்கத்தின் பின்னணியில், செம்மணியைப் பார்க்கலாம். மனிதப் புதைகுழிகளை மட்டும் அல்ல தமிழ் மக்கள் மத்தியில் கொல்லப்பட்டவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்கள், கைது செய்யப்பட்டவர்கள், சித்திரவதைக்கு உள்ளானவர்கள், தமது சொத்துக்களை இழந்தவர்கள்...போன்ற எல்லாத் தரப்புகளுக்கும் நீதி கிடைக்கத்த விதத்தில் அவர்கள் தொடர்பான தேவையான தரவுகளைத் திரட்ட வேண்டிய பொறுப்பு தமிழ் மக்கள் மத்தியில் உள்ள கட்சிகளுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் உண்டு.

உதாரணமாக, செம்மணியில் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் நபர்கள் தொடர்பான விவரங்களைத் திரட்ட வேண்டும். இது முதலாவது கட்டம். அடுத்த கட்டம் செம்மணியில் கண்டெடுக்கப்படும் எலும்புக்கூடுகளின் மரபணு மாதிரிக்கும் முறைப்பாடு செய்யும் உறவினர்களின் மரபணு மாதிரிகளுக்கும் இடையிலான தொடர்பைப் பரிசோதிப்பது. அதற்குரிய தொழில்நுட்பம் இலங்கையில் இல்லை என்று கூறப்படுகிறது. அவ்வாறாயின் அந்த தொழில்நுட்பத்தை வெளியில் இருந்து பெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வது. இந்த விடயத்தில் புலம்பெயர்ந்த தமிழர்கள் அதிகமாக உழைக்க முடியும்.

இந்த இரண்டு நடவடிக்கைகளின் முடிவில் எலும்புக் கூடுகளுக்கும் அவற்றின் உறவினர்கள் என்று சந்தேகப்படுகின்றவர்களுக்கும் இடையிலான உறவுகள் நிரூபிக்கப்படுமாக இருந்தால், அங்கே குற்றச் செயல்களை நிரூபிக்கப்படக்கூடிய நிலைமைகள் அதிகரிக்கும்.

கிழக்கு ஐரோப்பாவில் ஸ்ரெப்ரெப்னிக்காவில் அவ்வாறு மரபணுச் சோதனைகள் மூலமாகத்தான் புதைக்கப்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டார்கள்.

எனவே புதை குழிகளுக்கு நீதி கேட்பது என்று சொன்னால் அதற்கென்று விஞ்ஞானபூர்வமான வழிமுறைகள் உண்டு. இந்த விடயத்தில் புதை குழிகளை வைத்து அரசியல் செய்யும் தமிழ்க் கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் மேற்சொன்ன அறிவுபூர்வமான அடுத்தடுத்த கட்டங்களை நோக்கிப் போக வேண்டும்.

புதை குழிகளை வைத்து அரசியல் செய்ய வேண்டும். அது தவிர்க்க முடியாதது. ஏனென்றால் நீதிக்காக போராடும் ஒரு மக்கள் கூட்டத்தை பொறுத்தவரை புதைகுழிகள் உணர்ச்சிகரமானவை. அவை புதைக்கப்பட்ட உண்மைகளை வெளியே கொண்டுவரக் கூடியவை. உண்மை வெளியே வந்தால்தான் அந்த உண்மையின் அடிப்படையில் விசாரணைகளைச் செய்யலாம். நீதியை நிலை நாட்டலாம்.

இப்போதுள்ள இலங்கை அரசாங்கம் அவ்வாறு நீதியை நிலைநாட்டும் என்று எதிர்பார்ப்போடு இக்கட்டுரை எழுதப்படவில்லை. ஏனென்றால் அரசுத் தலைவர் அனுர அவர் அரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னரே அசோசியேட்ட் பிரஸ் நியூஸ் என்ற பன்னாட்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இந்தவிடயம் தொடர்பாகப் பேசியுள்ளார். அவர் கூறுகிறார், பாதிக்கப்பட்ட மக்கள் உண்மையைத்தான் அறிய விரும்புகிறார்கள். குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதை அல்ல என்று.

இது விவாதத்துக்குரிய கருத்து. உண்மையை ஏன் கண்டுபிடிக்க வேண்டும்? குற்றவாளிகள் யார்? குற்றத்தின் பின்னணி என்ன? போன்ற விவரங்களைத் திரட்டுவதற்குத்தானே? அந்த விவரங்கள் ஏன் வேணும்? இறந்தவர்களின் கல்லறை மீது எழுதி வைப்பதற்கா? இல்லை. அந்த விவரங்களின் அடிப்படையில் குற்றம் சாட்டப்படுகிறவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குத்தானே?

எனவே தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது இந்த விடயத்தில் உண்மையை கண்டுபிடிப்பதற்குமப்பால் நீதியை வழங்கத் தயாரில்லை என்று தெரிகிறது. நீதியை வழங்கத் தயாரில்லை என்பதனை மறுவளமாகச் சொன்னால் உண்மையைக் கண்டுபிடிக்க போகிறோம் என்று சொல்வது ஒரு விசுவாசமான நடவடிக்கையாக இருக்காது என்று பொருள். அது ஒரு கண் துடைப்பாகத்தான் இருக்க முடியும்.

எனவே தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது செம்மணியும் உட்பட ஏனைய எல்லாப் புதை குழிகள் மற்றும் போர்க்களத்தில் புரியப்பட்ட குற்றங்கள் தொடர்பாக உண்மையைக் கண்டுபிடிக்குமா என்பது சந்தேகம்தான். இந்த விடயத்தில் ஐநா அரசாங்கத்தின் மீது நிர்பந்தங்களை பிரயோகிக்கும் என்று தமிழர்கள் காத்திருக்க முடியாது. காத்திருக்கக் கூடாது என்பதைத்தான் அண்மையில் இலங்கைக்கு வந்து போன ஐநா மனித உரிமைகள் ஆணையாளருடைய உத்தியோகப்பூர்வ உரையாடல்கள் தமிழ் மக்களுக்கு உணர்த்தியுள்ளன. எனவே இப்பொழுது தமிழ் மக்கள் என்ன செய்யப் போகிறார்கள்? அல்லது என்ன செய்ய வேண்டும்?

நீதிக்காகப் போராடுவது என்றால் என்ன? குற்றம் நடந்திருப்பதை நிரூபிப்பதில் இருந்துதான் அது தொடங்குகிறது. குற்றம் நடந்திருப்பதை எப்படி நிரூபிப்பது? குற்றம் தொடர்பான சாட்சிகளையும் சான்றுகளையும் சேகரிப்பது. அவ்வாறு சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிக்க வேண்டும் என்பது ஏற்கனவே ஐநா தீர்மானம் நாற்பத்தியாறின் கீழ் ஒன்றின் பிரகாரம் ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறது. அதற்குரிய அலுவலகம் ஒன்று ஐநா மனித உரிமைகள் ஆணையாளருடைய அலுவலகத்துக்குள் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிக்கும் நடைமுறைக்கு இப்பொழுது ஓர் அனைத்துலகப் பரிமாணம் உண்டு.

ஆனால் ஐநாவின் அரசியலைப் பொறுத்தவரை அந்த நடைமுறையானது இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் நோக்கிலானதே தவிர உண்மையை விசுவாசமாகக் கண்டுபிடிக்கும் நோக்க முடையது அல்ல என்று தமிழ் மக்கள் சந்தேகிக்கத்தக்க விதத்தில்தான் அண்மையில் ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்த கருத்துக்கள் அமைந்திருக் கின்றன.

இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். கடந்த சுமார் 13 ஆண்டு கால ஐநா மைய அரசியலில் நிறைவேற்றப்பட்ட பெரும்பாலான ஐநா தீர்மானங்கள் கொழும்பின் மீது அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும் என்று விரும்பும் மேற்கு நாடுகளின் ராஜதந்திர இலக்குகளைப் பூர்த்தி செய்யும் நோக்கமுடையவைதான்.

மேற்கு நாடுகள் ஏன் அவ்வாறு விரும்புகின்றன? ஈழத் தமிழர்கள் மீதுள்ள இரக்கத்தினாலா? அல்லது மேற்கு நாடுகளில் வசிக்கும் சக்தி மிக்க புலம் பெயர்ந்த தமிழ் சமூகத்தின் அழுத்தம் காரணமாகவா? அல்லது சீனாவின் செல்வாக்குப் பொறிக்குள் விழக்கூடிய இலங்கை அரசாங்கம் சீனாவை நோக்கி போகக்கூடிய வாய்ப்புகளை குறைக்கும் ராஜதந்திர உள்நோக்கத்தைக் கொண்டவையா?

மேற்கண்ட கேள்விகளுக்கு சரியான விடைகளைப் பகுத்து ஆய்ந்து அறிந்து கொள்ளவில்லை என்றால் ஈழத் தமிழர்கள் நீதிக்கான போராட்டத்தில் வேகமாக முன்னேற முடியாது. அது மட்டுமல்ல, மேற்படி கேள்விகளுக்கான விடைகளைத் தேடாமல் ஐநாவை நோக்கி உழைப்பது, அல்லது மேற்கத்திய தலைநகரங்களை நோக்கி உழைப்பது போன்ற எல்லா அரசியல் நடவடிக்கைகளும் ஒரு கட்டத்துக்கு மேல் ஈழத் தமிழர்கள் எதிர்பார்க்கும் விளைவுகளை, எதிர்பார்க்கும் வேகத்தில் தரப்போவதில்லை.கடந்த 16 ஆண்டுகளும் அதைத்தான் நிரூபித்திருக்கின்றன.

ஈழத் தமிழர்களின் மேற்கு மைய அரசியலானது பெருமளவுக்கு காத்திருப்பு அரசியலாகவே காணப்படுகிறது. அதற்கு காரணம் என்ன? விடை மிக எளிமையானது; தெளிவானது. ஈழத் தமிழர்களின் விவகாரத்தை ஒரு மையத்திலிருந்து முடிவெடுத்து கட்டமைப்புகளுக்கு ஊடாக தொடர்ச்சியாமல் முன்னெடுக்க வேண்டியது யார்? தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள்; அரசியல் செயற்பாட்டாளர்கள்; குடிமக்கள் சமூகங்கள் போன்றவைதான். கடந்த 16 ஆண்டுகளாக மேற்கண்ட தரப்புகள் தங்களுக்கு இடையே ஐக்கியப்பட்டு அது தொடர்பாக ஒரு மையத்தில் இருந்து ஓர் அரசைப் போல முடிவெடுக்கும் ஒரு நிலைமை தோன்றியுள்ளதா? இல்லை.

**(தொடர்ச்சி 11 பக்கம்)**

## ஆடிப்பிறப்பு
## (நேரிசை ஆசிரியப்பா)

ஆடிப் பிறப்பு அருமைத் திருநாள்
பாடி ஆடியே பரவசம் கொண்டோம்
கூடிப் பனங்கட்டிக் கூழும் குடித்தோம்
தேடிக் கொழுக்கட்டை திகட்டத் தின்றோம்
நவாலி ஊரின் நல்ல கவிஞன்
நவின்றார் நமக்கொரு நல்ல கவியை
சோம சுந்தரச் சோதி நாயகன்
தாமம் போன்றொரு தங்கத் தாத்தா
அறிந்தவன் அறிவான் அரியலூர் பனாட்டை
உறிஞ்சியே உணர்வான் ஊதுபாற் கூழை
அந்நாள் நினைத்தால் அடிவயி றேங்குது
சொந்த நாடுபோய்ச் சுவைத்துக் குடிக்கவே!
நாடு வீட்டு நாடு வந்தோம்
வீடுவாங்கி விலாசமாய் வாழ்ந்து காட்டுறோம்
நாகரீகம் நாங்கள் நன்றே கற்றோம்
வேகமாய் வீட்டோம் விசேட நாட்களை
வேலை தொடங்க வேகமாய் ஓடுறீர்
காலை மாலை கடும்பணி செய்கிறீர்
ஒருநாள் ஏனும் ஓய்ந்து
திருநாட் கூழைத் திகட்டக் குடிப்போமே!
(தாமம் – – – – ஒளி)

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

கனடிய செய்திகள்
Canadian News

# "சிறு கற்கள் கொண்டு பெரும் சரித்திரம் படைப்போம்"

## கனடா வாழ் தமிழ் மக்களை வேண்டிநிற்கின்றனர் ஸ்காபுறோ தமிழ்ச் சமூக மையத்தின் நிதி சேகரிப்புக் குழுவினர்




கனேடியத் தமிழர்களின் நீண்டகால எதிர்பார்ப்பான தமிழ்ச் சமூக மையம் ஒன்றை கட்டி முடிக்கும் முயற்சி கடந்த சில வருடங்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பதை பலரும் அறிவார்கள்.

ரொரன்ரோ நகர சபை இதற்கான நிலத்தை 311 ஞயவவைநௌ வீதியில் வழங்கியுள்ளது.

கனடாவின் மத்திய மற்றும் ஒன்றாரியோ மாகாண அரசுகள் 26.3 மில்லியன் டொலர் நிதி உதவி வழங்குவதாக உறுதியளித்துள்ளன.

இந்த நிதி உதவியினை பயன்படுத்தி தமிழ்ச் சமூகமையத்தை கட்டி முடிப்பதற்கு தமிழ்ச் சமூகத்திடமிருந்து 15 மில்லியன் டொலர்களை திரட்ட வேண்டியது எமது முக்கிய பணியாக நாம் மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் இந்த கட்டுமானத்தை 2027ம் ஆண்டுக்குள் நிறைவு செய்வ வேண்டும் என்பதும் அவசியம்.

மூன்று இலட்சத்திற்கும் அதிகமாக தமிழர்கள் வாழும் இந்த நாட்டில் அனைவரும் பங்களித்தால் இந்த இலக்கை அடைய முடியும்.

இவ்வாறு ஸ்காபுறோ அமைய திட்டமிடப்பட்டுள்ள தமிழ்ச் சமூக மையத்தின் நிதி சேகரிப்புக் குழுவினர் கனடா வாழ் தமிழ் மக்களிடம் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

இந்த முக்கிய நிதி சேர்ப்புத் திட்டம் தொடர்பாக தொடர்ச்சியாக பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பெற்று நடைபெற்று வருகின்றன. பல தமிழர் வைபவங்களில் ஸ்காபுறோ தமிழ்ச் சமூக மையத்தின் நிதிக்காக மக்கள் இயன்றளவு நிதியை பகிரங்கமாக வழங்கி வருகின்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். மேற்படி நிதி சேகரிப்புக் குழுவினர் கூட்டாக கடந்த பல மாதங்களாக இந்த வேண்டுகோளை விடுத்து வருகின்றனர்.






"இந்த அரிய சந்தர்ப்பத்தை எமது கனடிய தமிழ்ச் சமூகம் கைவிட்டு விட்டால் நாம் தலை குனிந்தவர்களாக நிற்க வேண்டிய நிலை ஏற்படும். தமிழ்ச் சமூகத்தை தலை நிமிர்ந்து நிற்கும் நிலைக்கு உயர்த்தக் கூடிய இந்த உயரிய திட்டத்தை நிறைவேற்ற தவறினால் நாம் எதிர்கால கனடிய தமிழ்ச் சந்ததிக்கு பாதகம் செய்து விட்டோம் என்ற குற்ற உணர்வு எம்மிடம் என்றும் தொடர்ந்த வண்ணமே இருக்கும். எனவே நாம் இன்றிலிருந்து "ஸ்காபுறோ தமிழ்ச் சமூக மையம்" கட்டியெழுப்பெற்று நிமிர்ந்து நிற்பதை உறுதி செய்யும் வகையில் அடுத்து வரும் இரண்டு மாதங்களில் இந்தப் பணிக்காக உழைப்போம் என்று உறுதி எடுப்போம்".

இவ்வாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அவர்கள் தொடர்ந்து விடுத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளனர்.

10,000 டொலர்களை நன்கொடையாக வழங்குவதன் மூலம் குடும்ப நன்கொடைத் திட்டத்தில் இணைந்து கொள்ள முடியும். 2500 குடும்பங்கள் இந்த திட்டத்தில் இணைவதன் மூலம் இந்த இலக்கினை அடைய முடியும்.

தற்போதுள்ள பொருளாதார நெருக்கடிகள் மிக மோசமான தாக்கத்தை அனைவருடைய வாழ்விலும் ஏற்படுத்தி வருவதால் இந்த இலக்கை அடைவதில் சிரமங்களை எதிர் கொள்ள வேண்டிய நிலை தோன்றியுள்ளது.

இதற்கு மாற்றீடாக 1000 டெலார் பெறுமதியான நன்கொடைக்கான கட்டுமானக் கல் கொள்வனவுத் திட்டம் ஒன்று தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

மாதாந்தம் 100 டொலர்கள் செலுத்தி இந்த திட்டத்தில் இணைந்து கொள்ள முடியும்.

25,000 பேர் இந்த கட்டுமானக் கற்களை கொள்வனவு செய்யவதன் மூலம் எமது பெருங் கனவினை நனவாக்கலாம்.

2500 பேரை அடையாளம் கண்டு அவர்களை இந்த திட்டத்தில் இணைப்பதற்கு பல நூற்றுக் கணக்கான சமூக பங்களார்களின் Community Builders இன் ஒத்துழைப்பு அவசியாமகின்றது.

எமக்கான ஒரு சமூக மையம் உருவாக்கப்பட வேண்டும் என்ற பேரார்வம் கொண்டவர்கள் இதில் இணைவதன் மூலம் இதனை சாத்தியமாக்க முடியும்.

உங்கள் குடும்பத்தில், நண்பர்கள் வட்டத்தில், பணியிடத்தில், நீங்கள் அங்கம் வகிக்கும் அமைப்புகளில் உங்களுக்கு அறிமுகமானவர்களிடம் இந்த நன் கொடைக் கல் திட்டத்தை கொண்டு சேர்க்க வேண்டும்.

ஓவ்வொருவரும் தமக்கு நெருக்கமான 10 பேரை இந்த திட்டத்தில் இணைப்பதன் மூலம் இந்த வரலாற்று சிறப்பு மிக்க கட்டிடத்தை நாம் கட்டி முடிக்கலாம்.

இந்த சமூக மையமானது எமக்கானது எமது எதிர்காலம் இந்த மண்ணில் தமிழ் அடையாளத்தோடு வாழ்வதற்கு அவசியமானது.

எமது வரலாற்றை அடுத்த சந்ததிக்கு எடுத்து செல்வதற்கும் அமது பெருமைகளை அவர்கள் தெரிந்து கொள்வதற்குமான வாய்ப்பினை ஏற்படுத்தக் கூடிய ஆற்றல் மிக்கது.

இந்த பதிவினை உங்கள் சமூக வலைத்தளங்களில் பகிர்வதோடு இதற்கு தமது பங்களிப்பினை வழங்கக் கூடிய 10 பேரை உங்கள் பதிவில் குறிப்பிடுங்கள் (Tag).

அதேபோன்று உங்களுக்கு நன்கு அறிமுகமான தமிழ் ஆர்வம் கொண்ட 10 பேருக்கு இதனை பகிர்ந்து கொள்ளுங்கள் (Share).

**சிறு துளி பெரு வெள்ளம்**
**நாம் ஒன்றாய் சேர்ந்து கட்டி முடிப்போம்.**

இந்த திட்டத்தில் நீங்கள் இணைவதற்கான இணைப்பு: https://www.donatetcc.ca/

நன்றி,
தமிழ்ச் சமூக மையம்




*(11 பக்கம் தொடர்ச்சி)*

----------------------------------------

# *மனித உரிமைகள் ஆணையாளருடைய வருகைக்குப் பின்னரான அரசியல்*

----------------------------------------

ஈழத் தமிழர்கள் கடந்த 16 ஆண்டுகளாக சிதறிப் போய் காணப்படுகிறார்கள். தாயகத்திலும் அப்படித்தான். புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் அப்படித்தான். ஒரு மையத்திலிருந்து முடிவெடுக்க முடியாத அரசியல்.

இதன் ஆகப்பிந்திய வெளிப்பாடுதான் கடந்த வாரம் கஜேந்திரக்குமார் நடத்திய ஊடகச் சந்திப்பும் ஆகும். அதில் அவர் தெளிவாக சில விடயங்களைப் பேசுகிறார். பொறுப்புக் கூறலை ஐநா மனித உரிமைகள் சபைக்கு வெளியே கொண்டு போக வேண்டும் என்று கடந்த சுமார் நான்கு வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக வலியுறுத்தி வருபவர் அவர்தான். ஆனால் அவ்வாறு பொறுப்புக் கூறலை மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே கொண்டு போவதற்குத் தேவையான ராஜதந்திர நடவடிக்கைகளை யார் செய்வது?

தமிழ்த் தரப்புத்தான் செய்ய வேண்டும். அதை எப்படிச் செய்வது? தமிழ் மக்கள் அனைத்துலக சமூகத்தை தமக்கு ஆதரவாகத் திரட்ட வேண்டும். அவ்வாறு திரட்டுவது என்றால் முதலில் தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே திரட்டிக் கொள்ள வேண்டும். ஆனால் இங்கு ஏற்கனவே கூறப்பட்டதுபோல தமிழ் மக்கள் கடந்த 16 ஆண்டுகளாக தங்களை தாங்களே திரட்டிகொள்ள முடியாத ஒரு மக்கள் கூட்டமாகக் காணப்படுகிறார்கள்.

கஜேந்திரக்குமார் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலும் அது தெரிகிறது. அவர் தமிழரசு கட்சியை, குறிப்பாக சுமந்திரனை குற்றம் சாட்டுகிறார். சுமந்திரன் நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்தில் விசுவாசமாக ஈடுபடவில்லை என்று அவர் குற்றம் சாட்டுகிறார். இது புதிய குற்றச்சாட்டு அல்ல.கடந்த 15 ஆண்டுகளாக அவர்கள் கூறிவரும் ஒரு குற்றச்சாட்டு.

சுதந்திரன் ஐநா மைய அரசியலில் தனது மக்களுக்கு விசுவாசமாக இல்லை என்று சொன்னால், அதை அறிவுபூர்வமாக விளங்கி வைத்திருக்கின்ற, அதை விசுவாசமாக முன்னெடுக்க வேண்டும் என்று கூறுகின்ற, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது அதை முன்னெடுக்கலாம். அப்படி முன்னெடுப்பதற்குத் தேவையான மக்கள் ஆணையைப் பெறும் விதத்தில் அக்கட்சி தன்னை பலப்படுத்த வேண்டும். கடந்த உள்ளூராட்சி சபை தேர்தலை நோக்கி அக்கட்சியானது தன்னை ஓரளவுக்குப் பலப்படுத்திக் கொண்டுள்ளது. ஆனால் அது போதாது. இப்பொழுதும் தமிழரசுக் கட்சிதான் இருப்பவற்றில் பெரிய கட்சியாகவும், முதன்மைக் கட்சியாகவும் காணப்படுகிறது. எனவே இந்த விடயத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெளிவான ஒரு நிலைப்பாட்டை எடுத்து அதை நோக்கி உழைக்க வேண்டும். தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டத்தை தலைமை தாங்கி முன்னெடுக்கும் ஒரு கட்சியாக அது தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டும். நீதிக்கான போராட்டத்தில் தமிழ் மக்கள் இப்போது இருப்பதை விடவும் தீவிரமாகவும் தீர்க்கதரிசனமாவும் செயல்பட வேண்டியுள்ளது என்பதனைத்தான் ஐநா மனித உரிமைகள் ஆணையாளருடைய இலங்கை விஜயம் தமிழ் மக்களுக்கு உணர்த்துகின்றது.

## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள்**
**ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)


டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., 2/F**
**Scarborough, ON M1V 0G2**
**Tel: (416)502-2029**
**www.carefirstontario.ca**

11/24











## VILLAGE NISSAN

**தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்**

*DAA ROTATION



**25 SENTRA**
S CVT ULTRA-LOW
$69 WEEKLY | 39 MOS. LEASE $2,695 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION



**25 KICKS PLAY**
S ULTRA-LOW
$69 WEEKLY | 39 MOS. LEASE $2,192 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION




**25 ROGUE**
S AWD
0.99% | 30 MOS. LEASE
+$1,000 60th Anniversary Cash



**Sajanthan Vijayakumar**
SALES CONSULTANT

905.477.3337 647.631.9054
saj@villagenissan.com

NISSAN VILLAGE NISSAN
25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com




கோண்வோல் சிவன் ஆலயம் - கனடா
CORNWALL SHIVAN TEMPLE - CANADA
தெய்வத் திரு. சண்முகலிங்கம் வேலாயுதபிள்ளையின் ஆசீர்வாதத்துடன்
மஹோற்சவ விஞ்ஞாபனம் 2025
15 யூலை 2025 முதல் 26 யூலை 2025 வரை
கொடியேற்றம் 15.07.2025 செவ்வாய்க்கிழமை
சப்பிரத் திருவிழா 22.07.2025 செவ்வாய்க்கிழமை
தேர்த் திருவிழா 23.07.2025 புதன்கிழமை
தீர்த்தத் திருவிழா 24.07.2025 வியாழக்கிழமை
பூங்காவனம் 25.07.2025 வெள்ளிக்கிழமை
வைரவர் மடை 26.07.2025 சனிக்கிழமை
CORNWALL SHIVAN ஆ TEMPLE CANADA
தேர்த் திருவிழாவிற்கு
Toronto,mississauga, Brampton வில் இருந்து பஸ் சேவைகள் நடைபெறவுள்ளதால்
முற்பதிவிற்கு அழையுங்கள் ( கட்டணம் இருவழிச்சேவைக்கு $20)
416-564-9642
www.cornwallshivan.ca
1730 Vincent Massey Dr, Cornwall, ON K6H 5R6

# மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில் ஆடிப்பூர கஞ்சிக்கலச சிறப்பு பூசை

குருவடி சரணம் திருவடி சரணம்





மார்க்கம் வீதி ஸ்காபரோவில் அமைந்திருக்கும்
மேல்மருவத்துர் ஆதிபராசக்தி குருமன்றத்தில்

27-07-2025 ஞாயிற்றுக்கிழமை காலை 8:30 மணி முதல்
ஆடிப்பூர கஞ்சிக்கலச சிறப்பு பூசைகள் நடைபெற்று
11:00 மணியளவில் கஞ்சிக்கலசம் வீதிவலம் நடைபெற்று
சிறப்பு ஆராதனை நடைபெற்று மகேஸ்வர பூசையுடன்
முடிவடையும். அனைத்து சக்திகளையும் அன்னையின்
அருளைப்பெறுமாறு அன்புடன்
அழைக்கப்படுகின்றனர்.
ஆடிப்பூரகஞ்சி எடுப்பவர்கள் முன்கூட்டியே
அறிவித்தும் பதிவுசெய்யலாம்.

24-07-2025 வியாழக்கிழமை காலை
ஆடிஅமாவாசை சிறப்பு பூசையுடன் தந்தையின்
நினைவுநாளை முன்னிட்டு உரிய முறையில்
விரதம் இருந்து வருகின்ற பக்தர்கள் மனதில்
'லட்சுமிகரம்' வந்து சேரும் என்கிறார் அன்னை.
சிறப்பான முறையில் மகேஷ்வரபூசையும் நடைபெறும்.

80E நாஸ்டீன் வீதி ஸ்காபரோ கனடா
தொடர்புகளுக்கு: 647-436-9647

# ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 28-05-1955
இறப்பு: 20-07-2024

யாழ்ப்பாணம், கரம்பன் கிழக்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கனடா வோன். ரொறன்ரோ கனடாவில் வசித்துவந்தவருமான திருமதி. மனோன்மணி கனகராஜா அவர்களின் ஓராண்டு நினைவஞ்சலி.


ஓராண்டு கழிந்தாலும்
உன் முகம் தெரியுதம்மா!
உன் புன்னகையைப்போல்
இம் மாதம் நம் வீட்டில்
உன் பூக்கள் புன்னகை செய்யும் அம்மா!
அம்மா. அப்பா என்று
இரு குரல் ஒலித்த வீட்டில்
இன்று ஒரு குரல் இல்லை அம்மா...
மண்ணை விட்டுப் போனாலும்
எம் மனதை விட்டுப் போகவில்லை அம்மா...
எங்களுக்கு ஆறுதல் சொல்கின்றாய். அறிவு சொல்லுகின்றாய்!
அப்பாபிள்ளை. அப்பா பிள்ளை என்பீர்கள்
இன்று எம்மை விட்டு உன் அப்பாவிடம் சென்று விட்டாயே அம்மா

என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
அன்புக் கணவர் ராஜா, அன்பு மகள் ரொசானி,
சகோதர, சகோதரிகள், உற்றார், உறவினர்



**திருமதி. மனோன்மணி கனகராஜா (குஞ்சு)**

(கரம்பன் கிழக்கு ஊர்காவற்றுறை)




# காயாத இரத்தமும் ஆறாத ரணமும்

**"“காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்கள் நடத்தப்பட, குறைந்தபட்சம் ஒரு வாரம் முன்பு ஏதோ ஒன்று நடக்கப் போவது பற்றிய பேச்சு அடிபட்டது - ஏதோ ஒன்று மிகப் பயங்கரமாக, பாடம் ஒன்று கற்பிப்பது பற்றி” என டைம்ஸ் ஒப் சிலோன், சிலோன் டெய்லி நியூஸ் பத்திரிகைகளின் ஆசிரியராக இருந்த மேவின் டி சில்வா 1992 இல் தெரிவித்திருந்தார். “இது திடீரென்று சிங்கள மக்களிடையே எழுந்த இனவெறுப்பு எழுச்சியோ, அல்லது சிலர் குறிப்பிடுவது போல, 13 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டமைக்கான எதிர்வினையோ இல்லை.இது முன்னரே தெளிவாகத் திட்டமிடப்பட்டு, அந்தத் திட்டத்தின் படி நடத்தி முடிக்கப்பட்ட கொடூரம் என 1983 “கறுப்பு ஜூலை” பற்றி சர்வதேச நீதித்துறை வல்லுநர்கள் ஆணையத்தின் அறிக்கையில் போல் சீகார்ட் குறிப்பிட்டுள்ளார்.”"**

- கே. பாலா -

இலங்கையில் தமிழர் என்ற தேசிய அடையாளத்தை முற்றிலும் துடைத்தழிக்க துடித்த சிங்களப் பேரினவாத அரசு, இலட்சக்கணக்கான தமிழர்களை கொன்று இனப்படுகொலை செய்து தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை மௌனமாக்கியுள்ளது. இவ்வாறான இனப்படுகொலைகள் காலங்கள் கடந்தாலும் நம் இரத்தத்தை உறைய வைப்பவை. நடத்தப்பட்ட படுகொலைகள் நம் உணர்ச்சிகளை கொந்தளிக்கச் செய்பவை. ஈழத் தமிழர்களின் வரலாற்றை படிப்பவர்கள் கண்ணீரின்றி கடக்க முடியாத நிகழ்வுகளுள் இந்த கறுப்பு ஜூலை என்ற ஜூலைக் கலவரம் மிகக்கொடூரமானது. 1983 ஜூலையில் நடந்தது வெறும் கலவரம் அன்று. அது உள்நாட்டுப் போரின் தொடக்கம். சிங்களம் - தமிழ் என்ற இரண்டு இனங்களும் சேர்ந்து வாழ்வதில் ஏற்பட்டுவிட்ட முடிவு.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் திகதி முதல் ஒரு வாரத்திற்கு சிங்களப் பேரினவாத அரசாலும், சிங்கள இனவெறியர்களாலும் தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட இந்தக் கொடூரங்கள் அரங்கேற்றப்பட்டு. தற்போது 42 வருடங்கள். நிறைவடைந்துள்ளன. ஒரு மனிதன் உணர்ச்சி மரத்துப் போய் நிர்வாணமான நிலையில் தலையில் கை வைத்து அமர்ந்திருக்க, சுற்றிலும் இளைஞர்கள் மகிழ்ச்சியுடன் ஆர்ப்பரிக்கும் புகைப்படத்தை காணாதவர்கள் இருக்க முடியாது. ஜூலை கலவரத்தின் சாட்சியாக உலகத்தின் மனசாட்சியை உலுக்கிய புகைப்படம் இது. தமிழர் என்ற அடையாளமே சிங்கள வெறியர்களுக்கு வெறியேற்றிக் கொள்ள போதுமானதாக இருந்தது.

இந்தக் கலவரத்தில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்களை, சிங்கள இனவெறியர்கள் கண்டந்துண்டமாக வெட்டி வீசினார்கள். குடும்பம், குடும்பமாக தமிழர்களை உயிரோடு தீயிட்டுக் கொளுத்தினார்கள். 500 க்கும் மேற்பட்ட தமிழ்ப்பெண்கள் ஈவிரக்கமின்றி இந்த வெறியர்களால் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். வணிக வளாகங்கள், கடைகள், எரிபொருள் நிலையங்கள், திரையரங்குகள் என 5000 க்கும் மேற்பட்ட தமிழர்களின் வர்த்தக நிறுவனங்களை குறிவைத்து சூறையாடினார்கள். தப்பிய தமிழர்கள் கப்பலில் ஏற்றப்பட்டு உங்கள் நாட்டுக்கு ஓடுங்கள் என வடக்கிற்கு அனுப்பப்பட்டார்கள்.

வாகனங்களில் சென்ற தமிழர்களை வழிமறித்து உயிரோடு எரித்துக் கொன்று நடனமாடிய சம்பவங்கள், வாக்காளர் பட்டியலை வைத்துத் தமிழர்களை அடை யாளம் கண்டு வீடுகளிலிருந்து இழுத்தெறிந்து வெட்டித் துண்டாடிய காட்சிகள், பெற்றோருக்கு முன்பாக மகளும் கணவர்களுக்கு முன்பாக மனைவிகளும் சகோதரர்களுக்கு முன்பாக சகோதரிகளும் இக்காடைக்கும்பல்களினால் நிர்வாணமாக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்ட, வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட கொடூரங்களும் கடைகளில் “தமிழனின் கறி கிடைக்கும்” என பலகையில் எழுதி வைத்து எக்காளமிட்ட கோரங்களும் இன்று நினைத்தாலும் உடல் நடுங்க வைத்து விடும். “ஜூலைக் கல-வரம்” எனப்படும் தமிழினப்படுகொலை இலங்கைத் தமிழர்களின் மனங்களில் ஆறாத ரணமாக, தீராத வலியாக கனன்று கொண்டிருக்கின்றது. இந்த ஜூலைக் கலவரம் நடந்தேறி 42 வருடங்கள் கடந்துவிட்டாலும் அது தமிழரின் மனத்தோடு ஆழமாக பதிந்து விட்டது. ஒவ்வொரு வருடமும் வரும்போதும் ஜூலை என்றதுமே தமிழரின் மனங்களில் 83 இன் தமிழர்களின் இரத்தக் கறைபடிந்த கறுப்பு ஜூலை நினைவிற்கு வந்து கண்ணீர் சிந்த வைப்பதை தவிர்க்க முடியாது.

தமிழர்களின் பொருளாதார அடித்தளத்தை அழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடனே நன்கு திட்டமிடப்பட்டு இந்தக் கலவரம் நடந்தது. அதற்காகவே தமிழர்களின் உடைமைகள், வர்த்தக நிலையங்கள், சொத்துகள் தொடர்பான விபரங்கள் ஏற்கனவே சிங்கள அதிகாரிகளால் கலவரக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. ஆறு நாட்கள் சிங்கள வெறியர்களின் கையில் கொழும்பு மாநகரமும், தென்னிலங்கையும் இருந்தது. தலைநகரமெங்கும் தமிழர்களின் மரண ஓலங்களும், தீயடங்காது எரியும் தமிழர்களின் வணிக நிலையங்களும் என கொழும்பு கோரமாய்க் காட்சியளித்தது. இன்னொரு குரூரமும் ஜூலை 25ஆம் திகதி நடந்தேறியது.

கொழும்பின் வெலிக்கடைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளான ரெலோ இயக்கத் தலைவர்களான குட்டிமணி, தங்கதுரை, ஜெகன், உட்பட 37 பேரை வெலிக்கடை சிறை அதிகாரிகளின் ஒத்துழைப்போடு அவர்கள் அளித்த ஆயுதங்களோடு மிகக் கொடூரமாக கொல்லப்பட்டனர். நான் மரணித்தால் எனது கண்களை ஒரு தமிழனுக்கு கொடுங்கள் அதன் மூலம் நான் தமிழீழத்தை பார்க்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் கூறிய குட்டிமணியின் கண்கள் பிடுங்கி எறியப்பட்டன. அந்த நாளோடு மட்டும் அந்தக் கொடூரம் முடியவில்லை. மீண்டும் ஜூலை 28ஆம் திகதியும் வெலிக்கடை சிறையில் தாக்குதல் நடத்தப்பட்டது. 18 தமிழர்கள் கொல்லப்பட்டனர். மூன்றே நாட்களில் 55 தமிழ் கைதிகள் சிறையில் சிங்கள இனவெறிக்கு இரையானர்கள்.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதி யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் இடம்பெற்ற விடுதலைப்புலிகளின் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதன் எதிரொலியாக தலைநகர் கொழும்பில் வாழ்ந்த தமிழர்களுக்கு எதிராக இந்த தமிழினப்படுகொலை ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்டது என்று கூறப்பட்டாலும் இந்த இனப்படுகொலை அந்த தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்னரே நன்கு திட்டமிடப்பட்டிருந்தது. திருநெல்வேலி தாக்குதலில் 13 ராணுவத்தினர் கொல்லப்பட்ட நிலையில் யாழ்ப்பாணத்திலேயே அவர்கள் உடல்களை அடக்கம் செய்ய இராணுவத்தினர் விரும்பிய போதும், அப்போதைய ஜனாதிபதி ஜெயவர்த்தனே அவர்களது உடலை கொழும்பில் சிங்கள மக்கள் மத்தியில் பார்வைக்கு வைத்து அடக்கம் செய்ய முடிவெடுத்தார். ஜெயவர்த்தனா அரசு இராணுவத்தினரின் மரணத்தை இனவெறி தூண்டும் நிகழ்வாக மாற்றியது.

எந்த இராணுவ வீரர்கள் மறைவிற்கும் கடைப்பிடிக்காத புதிய முறைகளில் இந்த இராணுவத்தினருக்கு இறுதி ஊர்வலம் நடந்தது. சவப்பெட்டியில் எடுத்து வராமல் வேண்டுமென்றே சூழ்ச்சியுடன் பொலித்தீன் பைகளில் பிணங்களை கட்டிக் கொண்டு வந்தார்கள். இருட்டும் வரை இறுதி ஊர்வலத்தை தாமதப்படுத்தி சிங்களவர்களிடம் கொதிப்புணர்வை தூண்டச் செய்தார்கள். இந்த தாமதம் பெரும்பாலான சிங்களவர்களை கொழும்பை நோக்கி வரச் செய்வதற்கு போதுமான காலமாக இருந்தது. அரச பயங்கரவாதிகளின் குரூரப் புத்தியால் தூண்டப்பட்ட சிங்கள வெறியர்களால் அப்பாவித் தமிழர்களின் இரத்தம் கொழும்பு வீதியெங்கும் ஆறாக ஓடியது.

கறுப்பு ஜூலை, இலங்கையின் முதல் படுகொலை அல்ல. அதற்கு முன்னர் 1958இலும் இத்தகைய இனப்படுகொலைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. 70-களிலும் நிகழ்த்தப்பட்டுள்ளன. அப்போது விடுதலைப் புலிகள் இலங்கை ராணுவம் மீது தாக்குதல்கள் எவற்றையும் நடத்தவும் இல்லை. தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து அறவழிப் போராட்டத்தைத் தமிழ் அரசியல்வாதிகள் முன்னெ டுத்த வேளையில்தான், 1958இல் 300 ஈழத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். அதேபோல 1981இல் யாழ் நூலகம் எரிக்கப்பட்டு, அறிவின் மீதும் புத்தகங்களின் மீதும் மிகப் பெரிய வன்முறை நிகழ்த்தப்பட்டது. ஆக, விடுதலைப் புலிகள் உள்ளிட்ட இயக்கங்களின் எழுச்சியை மக்களைப் படுகொலை செய்து அழிக்கவும் திசைதிருப்பவும் அன்றைய இலங்கை அரசு தீர்மானித்தது. இதனால் விடுதலைப் புலிகள் திருநெல்வேலியில் தாக்குதல் நடத்திய மறுகணமே தலைநகர் கொழும்பில் தமிழ் மக்கள்மீது இனப்படுகொலை திட்டத்தை கட்டவிழ்த்து விட்டது.

1983 ஓகஸ்ட் 4ஆம் திகதி இலங்கை பாராளுமன்றத்தில் 1978ஆம் ஆண்டின் இரண்டாம் அரசியலமைப்பின் 6ஆவது திருத்தச் சட்டமூலம் விவாதிக்கப்பட்ட போது, 1983 “கறுப்பு ஜூலை” இன அழிப்புக்கு, மார்க்ஸிய - இடதுசாரிக் கட்சிகளே காரணம் என்று கம்யூனிஸ்ட் கட்சி, நவ சமசமாஜக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) ஆகிய மூன்று கட்சிகளையும், ஜே.ஆர் தலைமையிலான ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தடை செய்திருந்த நிலையில், தமது கட்சி மீது சுமத்தப்பட்டிருந்த அபாண்டமான பழிக்கெதிராக கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஒரே பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சரத் முத்தெட்டுவேகம ஆதங்கம் மிக்க உரையொன்றை ஆற்றியிருந்தார்.

“தாக்குதலுக்குள்ளான பிரதேசங்களில் அரசுக்குச் சொந்தமான இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களே, காடையர்களை ஏற்றி வந்தது என்பது அனைவருக்கும் தெரிந்ததே. நான் இதனை ஒரு கருத்தாகச் சொல்லவில்லை. அந்தப் பிரதேசங்களிலுள்ள உங்களுடைய நண்பர்களிடம் போய்க் கேட்டுப் பார்த்தால், உங்களுக்கு இது தெரியும்.அகலவத்தைப் பிரதேசத்துக்குக் காடையர்களை அழைத்து வந்தது, மின்சார சபைக்குச் சொந்தமான வாகனங்கள். இதனால் மின்சார சபைத் தலைவரோ, அதற்குரிய அமைச்சரோ இதற்கு ஆணை பிறப்பித்தார்கள் என்று நான் சொல்லவில்லை. அது என்னுடைய கருத்தல்ல. ஆனால் அரச இயந்திரம் பயன்படுத்தப்பட்டது” என்று, 1983 “கறுப்பு ஜூலை” இன அழிப்பில், அரச இயந்திரத்தின் பயங்களிப்பைச் சுட்டிக் காட்டியதுடன், தணிக்கை அதிகாரி, யாழ்ப்பாணத்தில் 13 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்ட செய்தியை மட்டும், 25ஆம் திகதி காலை பத்திரிகைகளில் பிரசுரிக்க அனுமதித்தது எப்படி? நாட்டை அதற்கு எந்த வகையிலும் தயார்படுத்தாது, அந்தச் செய்தி எப்படி அனுமதிக்கப்பட்டது? நாட்டின் இரண்டு இடங்களில் வன்முறை வெடித்த பின்பும், 25ஆம் திகதி காலையிலேயே, ஊரடங்குச் சட்டத்தை அரசாங்கம் பிரகடனப்படுத்தாது விட்டது ஏன் என்று, காரசாரமாக அரசாங்கத்தை நோக்கி, நியாயமான கேள்விகளையும் முன்வைத்தார்.



(தொடர்ச்சி 17 பக்கம்)

# பிரதேச மக்களுகளின் உணவுப் பாதுகாப்பு உறுதி செய்வப்படுவது அவசியம்

இலங்கை செய்திகள் Sri Lanka News

## வேலணை பிரதேச சபையின் உறுப்பினர் அனுசியா வலியுறுத்து!



அதிகரித்துச் செல்லும் அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றம், மற்றும் தரமற்ற பொருட்களின் விற்பனையால் மக்கள் அண்மைக் காலமாக பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளது. இது எமது பிரதேசத்திலும், மக்கள் தமது அத்தியாவசிய உணவு தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும், அவர்களின் சுகாதாரத்தை மட்டுமல்லாது ஆரோக்கியத்தை பாதுகாப்பதிலும் பெரும் சவாலாக இருப்பது வேதனைக்குரியது என வேலணை பிரதேச சபையின் உறுப்பினர் திருமதி அனுஷியா ஜெயகாந்த் தெரிவித்துள்ளார்.

வேலணை பிரதேச சபையின் இரண்டாவது மாதாந்த கூட்டம் 16ம் திகதி அன்று புதன்கிழமை தவிசாளர் அசோக்குமார் தலைமையில் காலை 10.00 மணிக்கு சபையின் சபா மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பில் பிரஸ்தாபித்த அனுசியா ஜெயகாந்த் மேலும் கூறுகையில், எமது வேலணை பிரதேசமானது பொருளாதார ஈட்டலில் பின்தங்கிய மக்களைக் கொண்டதாக இருக்கின்ற நிலையில் மக்களுக்கு கிடைக்கின்ற பொருட்களுக்காவது உணவுப் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாட்டை உறுதிசெய்வதற்கு எமது பிரதேச சபை கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

பல பொருட்கள் குறிப்பாக, அத்தியாவடிய பொருகள், மரக்கறி வகைகள் மற்றும் கடலுணவு பொருட்கள் யாழ் நகரில் விற்கப்படும் விலையை விட இரட்டிப்பான விலைக்கு கூட இங்கு பெறமுடியாத நிலை காணப்படுகின்றது.

குறிப்பாக கடல் வளம் எமது பிரதேசத்தின் முதற்தர வளமாக இருக்கின்றது. கடந்த காலத்தில் கடற்றொழில் அமைச்சும் அத்தொழிலை முன்னெடுக்கும் மக்களுக்கு பலதரப்பட்ட மானியங்கள் மற்றும் சலுகைகளை தொடர்ச்சியாக வழங்கிய வண்ணமே இருந்திருக்கின்றது.

அதேபோன்று வெளிநாடுகளும் உதவித் திட்டங்கள் என்ற போர்வையில் அந்த மக்களுக்கு பலவற்றை வழங்கி வருன்றன.

இதை இனியும் இந்த புதிய அரசும் தொடர வேண்டும் என்பது எதிர்பார்ப்பாக உள்ளது.

ஆனாலும் கடலுணவு பொருட்கள் மட்டும் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு மலிவாக கிடைப்பதில்லை என்ற ஏக்கம் வேலணை வாழ் கடற்றொழில் சாரா ஏனைய மக்களின் மனதுகளில் ஏக்கமாக இருக்கின்றது.

இதற்கு சந்தைப்படுத்தலில் வெறியூர் வியாபாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதால் கடலுணவின் விலை உச்சம் பெறுகின்றது என்ற காரணம் முன்வைக்கப்படுகின்றது.

இது கடற்றொழிலாளர்களுக்கு நன்மையானதாக இருக்கின்ற ஒரு விடயம்தான். அது வரவேற்கத்தக்கதொன்றாகவும் உள்ளது. ஆனால் உள்ளூர் நுகர்வோர் அதனால் பெரும் ஏமாற்றத்தையே சந்திக்கின்றனர்.

அந்தவகையில் கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்படாத வகையில் மலிவாக உள்ளூர் நுகர்வோருக்கு, குறிப்பாக மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதை அல்லது கிடைப்பதை உறுதி செய்வதில் எமது பிரதேச சபைக்கும் பொறுப்புள்ளது.

அதேபோன்று அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் அடிக்கடி உயர்வதால், சில வர்த்தகர்கள் பொருட்களைப் பதுக்கி வைத்து செயற்கையாக விலையை உயர்த்துவதாலும் எமது மக்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகின்றனர்.

அதுமட்டுமல்லாது கலப்படம் செய்யப்பட்ட உணவுப் பொருட்கள், பாவனைக்கு உதவாத பொருட்கள் மற்றும் சுகாதாரமற்ற உணவுப் பொருட்கள், உணவுப் பொருட்கள் கையாளப்படும் இடங்களில் பரவலாக இருக்கின்றதை அவதானிக்க முடிகின்றது.

இதனால் எனது மக்களின் ஆரோக்கியமே கேள்விக்குறியாகிறது.

இதற்கு உணவுப் பாதுகாப்பு மற்றும் விலை கட்டுப்பாடுகள் தொடர்பான சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் குறித்து பொதுமக்களிடமோ அல்லது வர்த்தகர்களிடமும் போதிய விழிப்புணர்வு இல்லை என்ற நிலையும் உள்ளது.

அதுமட்டுமல்லாது துறைசார் அதிகாரிகளின் தொடர்ச்சியான கண்காணிப்பு இல்லாமையும் வர்த்தகர்கள் விதிமுறைகளை மீறுவதற்கு வாய்ப்பாக அமைகிறது.

எனவே பிரதேச மக்களின் நலன்களைப் பாதுகாக்க - பிரதேச சபை பின்வரும் நடவடிக்கைகளில் அக்கறை செலுத்துவது அவசியம் என நான் இந்த சபையில் முன்மொழிகின்றேன்.

அதனடிபையில் பிரதேச சபை உறுப்பினர்கள், உணவு ஆய்வாளர்கள், சுகாதார அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் அடங்கிய ஒரு கண்காணிப்புக் குழுவை உருவாக்கல் -

குறித்த குழுவினர் சந்தைகள், கடைகள் மற்றும் உணவு பொருட்களை கையாளும் நிலையங்களில் தொடர்ச்சியான சோதனைகளை மேற்கொள்ளல் -

விலைப்பட்டியல் சரியான முறையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதா, பொருட்கள் பதுக்கப்படுகிறதா, தரமற்ற பொருட்கள் விற்கப்படுகிறதா என்பதை உறுதி செய்தல் -

அத்துடன் விலை கட்டுப்பாட்டை மீறுவோர், பதுக்கலில் ஈடுபடுவோர் மற்றும் தரமற்ற பழுதடைந்த உணவுப் பொருட்களை விற்பனை செய்வோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுத்தல் -

அதுமட்டுமல்லாது குறித்த சட்டப் பிரிவுகளின் கீழ் வழக்குத் தொடரப்பட்டு, உரிய அபராதங்கள் மற்றும் தண்டனைகள் வழங்கப்படுவதை உறுதி செய்தல் - இவற்றுக்கு மேலாக உணவுப் பாதுகாப்பு, சரியான விலை நிர்ணயம் மற்றும் நுகர்வோர் உரிமைகள் குறித்து விழிப்புணர்வை சமூக மட்ட அமைப்புகள் ஊடாக மக்களிடம் கொண்டுசெல்லல் -

முறைப்பாடுகளை பதிவு செய்வதற்கான இலகுவான இரகசியமான வழிமுறைகள் குறித்து பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தல் -

விழிப்புணர்வு சுவரொட்டிகள் மற்றும் துண்டுப் பிரசுரங்களை பொது இடங்களில் ஒட்டுதல் -

உணவு உற்பத்தி மற்றும் கையாளும் தரப்பினர் அனைவரும் சுகாதாரச் சான்றிதழைப் புதுப்பிப்பதை அல்லது எடுத்தக்கொள்வதை கட்டாயமாக்கல் -

பிரதேச செயலகம், நுகர்வோர் அதிகார சபை, சுகாதார அமைச்சு மற்றும் பிற சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் நெருங்கிய ஒருங்கிணைப்பை ஏற்படுத்தல் -

இவ்வாறான கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமும் இந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்பதுடன் மேற்கண்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம், உணவுப் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு ஆகியவற்றை உறுதிப்படுத்தி, பிரதேச மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியும் என்ற நம்பிக்கை இச்சபையில் இருக்கும் அனைவருக்கும் உண்டு என நம்புகின்றேன் என்றும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

# இரும்பாகு!
# இனியும் எரிந்து சாம்பலாகாதே!



*எத்தனை முறை எரித்தாலும் எரிந்தாலும்*
*சாம்பலாவது என்னவோ எம்மினம் தான்,*
*சாம்பலுக்குள்ளிருந்து இனி எழப்போவது*
*பீனிக்ஸ் பறவைகள் அல்ல!.*
*எழுந்த பீனிக்ஸ் அத்தனையும்*
*மீண்டும் தங்களை ஆகுதியாக்கி*
*மண்ணுக்கான விதைகளாகி*
*இன்று உறங்கு நிலையில்.....*
*இனியும் எரிந்து சாம்பலாகாதே*
*இனி நம் இருப்பைக் காக்க*
*எரியும் நெருப்பாகி உருக்கு,*
*உருகும் இரும்பாகி உருமாறு.*
*வதை முகாம்களுக்குள்ளே – நம்*
*சதையைத் தின்றுவிட்டு ஓநாய்கள்*
*சிதைத்த நம்மவர் எச்சங்கள்*
*புதை குழிக்குள்ளே இன்னும் சிதையாமல்*
*விதைகளாய் தெரிந்தன செம்மணியில்.*
*பதைக்க வைக்குது பகைவரையும்.*
*திறந்த வெளிச் சிறைக்குள்*
*திரிந்தன நம் உறவுகள் அன்று,*
*கிரிசாந்தியை தேடிய போதுதான்*
*சோம ரத்தின ராணுவ கொடியவரின்*
*காம வெறியாட்டமும்*
*செம்மணியின் உண்மைகளும்*
*அம்மணமானது.*
*ஊருக்கு ஒரு இடுகாடு இது நியதி*
*ஊரே இடுகாடுகளாய் ஈழத்து நியதி.*
*முற்றங்களிலும் மல்லிகை வைக்க*
*இனி மண்ணைத் தோண்டாதீர்கள்,*
*கண்ணில் படலாம் காணாமல் போன*
*உறவுகளின் மண்டை ஓடுகள்.*
*மண்டை கழண்டு போய்*
*சொத்தைச் சேர்க்க இனத்தை விற்கும்*
*சொத்தை அரசியல் தலைமைகளை*
*இனியும் நம்பினால்,*
*இனப்படுகொலைக்கு ஆதாரமான*
*இந்தப் புதைகுழிகளே இனவாத அரசால்*
*புதைகுழிக்குள்ளே நாமாகலாம்.*
*கண்முன்னே இன்று சாகும் காசாவையே*
*கண்டுகொள்ளாத சர்வதேசம்*
*நம் எலும்புகளை எண்ணி! எண்ணி!!*
*என்ன செய்யப் போகிறது.*
*ஐக்கிய நாடுகள் சபை கூட*
*வக்கில்லாத,உலகின் யுத்தங்களின்*
*உக்கிப்போன எலும்புகள் மீது*
*கட்டப்பட்டது தான் வரலாறு.*

**கவியாக்கம்: போல் ஜோசேப் (கனடா)**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கையின் வடக்கு மாகாணத்தில் ஆசிரிய இடமாற்றங்களை தாமதமின்றி நடைமுறைப்படுத்த வடக்கு ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல்!

பு. கஜிந்தன்



வடக்கு மாகாண இடமாற்றக் கொள்கையை வினைத்திறனாக மாற்றியமைப்பதற்கும், ஆசிரிய இடமாற்றங்களை தாமதமின்றி நடைமுறைப்படுத்துவதற்கும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் மற்றும் இலங்கை அதிபர் சேவைச் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (13.07.2025) அன்று ஆளுநர் செயலகத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

ஆசிரியர் இடமாற்றச் சபையில் பதிவு செய்யப்பட்ட இயங்குநிலையிலுள்ள தொழிற்சங்கங்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கவேண்டும் எனவும், அனுமதியற்ற தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இடமாற்றச் சபையில் இடம்பெற்றிருந்தால் அதனூடாக வழங்கப்படும் இடமாற்றம் சட்டரீதியாக சவாலுக்கு உட்படுத்தப்படும் அபாயம் உள்ளதாக கௌரவ பிரதியமைச்சர் மஹிந்த ஜயசிங்க சுட்டிக்காட்டினார். வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் சகல வலயங்களுக்கும் அனுமதிக்கப்பட்ட தொழிற்சங்களின் விவரங்களை அனுப்பவேண்டும் எனவும் அவர் கோரினார்.

தேசிய இடமாற்றக் கொள்கையுடன் வடக்கு மாகாண இடமாற்றக் கொள்கை சில இடங்களில் ஒத்துச்செல்லவில்லை. இருப்பினும் வடக்கு மாகாண இடமாற்றக் கொள்கை இன்னமும் வினைத்திறனாக மாற்றியமைக்கப்படவேண்டும் என வலியுறுத்திய ஆசிரிய சேவைச் சங்கத்தினர், சேவையின் தேவை கருதிய இடமாற்றங்கள் வலயக் கல்விப் பணிப்பாளர்களால் வழங்கப்படும்போது அது தொடர்பில் 14 நாள்களுக்குள் இடமாற்றச் சபைக்கு அறிவிக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டனர். அதை நடைமுறைப்படுத்துமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்களை அறிவுறுத்தினார்.

இடமாற்றங்களின்போது அரசியல் தலையீடுகளுக்கு அனுமதியளிக்கவேண்டாம் எனக் கோரிக்கை விடுத்த ஆசிரியர் சேவைச் சங்கத்தினர் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணைகளை துரிதப்படுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினர். மேலும் ஆசிரியர்களால், அதிபர்களால் திணைக்களங்களில் ஒப்படைக்கப்படுகின்ற ஆவணங்களுக்கு பெற்றுக்கொண்டமைக்கான உறுதிப்படுத்தல் கடிதம் வழங்கப்படவேண்டும் என முன்வைத்த கோரிக்கையை செயற்படுத்துவதாக கல்வி அமைச்சின் செயலர் குறிப்பிட்டார்.

அதிபர் நியமனங்கள் வழங்கப்பட்டு அதனைப்பொறுப்பேற்காதவர்கள் தொடர்பான விடயமும், அதிபர் வெற்றிடங்கள் காணப்படும் நிலையில் அதனை நிரப்பும் வகையில் அவர்களை உள்வாங்குமாறும் அதிபர் சேவைச் சங்கப் பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட்டது. அதிபர்கள் இடமாற்றக் கொள்கை தயாரிக்கும் நடவடிக்கை இடம்பெற்று வருவதாக கல்வி அமைச்சின் செயலாளர் இதன்போது தெரிவித்தார்.

வன்னிப் பிரதேசத்திலுள்ள வலயங்களிலிருந்து ஆசிரியர்கள் விடுவிக்கப்பட்டுள்ள போதிலும் பதிலீடாக வரவேண்டிய ஆசிரியர்கள் இன்னமும் அங்கு வராமையால் எழுந்துள்ள சிக்கல்கள் தொடர்பில் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் சுட்டிக்காட்டினார். இடமாற்றம் வழங்கப்பட்டவர்களை எதிர்வரும் புதன்கிழமையுடன் தற்போதுள்ள வலயங்களில் சேவையை முடிவுறுத்தி புதிய நிலையங்களில் பொறுப்பேற்பதற்கான ஒழுங்குகளை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மேற்கொள்ளவேண்டும் என ஆளுநர் வலியுறுத்தினார்.

அரசாங்கம் எதிர்காலத்தில் பிரதேச மாணவர்களின் கல்வியைப் பாதிக்காத வகையில், கொத்தணிப் பாடசாலை முறைமைய வலுப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் இதனூடாக அதிபர், ஆசிரியர்கள் பற்றாக்குறை தொடர்பான விவகாரத்தை தணிக்க முடியும் என நம்புவதாகவும் கௌரவ பிரதியமைச்சர் மஹிந்த ஜயசிங்க குறிப்பிட்டார்.

இதேவேளை, மாணவர்களின் கல்வியை வளர்த்தெடுப்பது தொடர்பிலேயே சிந்திக்கவேண்டும் எனவும், ஆசிரியர்கள், அதிபர்கள், அதிகாரிகள் தங்கள் சுகபோகங்களையும் வசதி வாய்ப்புக்களையும் நோக்கமாகக்கொண்டு செயற்படக்கூடாது என்றும் கௌரவ பிரதியமைச்சர் பிரதீப் சுந்தரலிங்கம் கேட்டுக்கொண்டார். மாணவர்களின் கல்விக்காக சில விட்டுக்கொடுப்புக்களையும், கஷ்டங்களையும் ஆசிரியர்கள், அதிபர்கள், அதிகாரிகள் தாங்கிக் கொள்ளவேண்டும் எனவும் அவ்வாறில்லாவிட்டால் வடக்கு மாகாணத்தை கல்வியில் உயர்த்துவது கடினம் என்றம் குறிப்பிட்டார்.

இதேவேளை, பாடசாலைக்கான அனுமதிகளில் சில இடங்களில் பாரபட்சம் காட்டப்படுவது தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது. அவ்வாறானதொரு விடயத்துக்கு தயவுதாட்சணயமின்றி நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ பிரதியமைச்சர் மஹிந்த ஜயசிங்க கோரினார். ஆவ்வாறான முறைப்பாடுகள் கிடைத்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என ஆளுநர் இதன்போது உறுதியளித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் பொதுச் செயலாளரும் கௌரவ பிரதியமைச்சருமான மஹிந்த ஜயசிங்க, இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் தேசிய அமைப்பாளரும், கௌரவ பிரதியமைச்சருமான பிரதீப் சுந்தரலிங்கம், ஆசிரியர் சேவைச் சங்கத்தின் உபதலைவரும் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெகதீஸ்வரன் ஆகியோரும், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் க.பிரட்லி ஜெனட், வடக்கின் அனைத்து வலயங்களினதும் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.



(15 பக்கத் தொடர்ச்சி)

# காயாத இரத்தமும் ஆறாத ரணமும்

1983 "கறுப்பு ஜூலை" கலவரங்களின் பின்னணியில், அரச இயந்திரத்தின் பங்களிப்பு இருந்தமைக்கான சாட்சியங்களை, ஆதாரங்களை பலரும் எழுத்தில் பதிவு செய்திருக்கிறார்கள். இலங்கையின் பிரபலமான ஊடகவியலாளர்களில் ஒருவரும் லேக் ஹவுஸின் டைம்ஸ் ஒ்.ப் சிலோன், சிலோன் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராக இருந்தவருமான மேவின் டி சில்வா 1992இல், 1983 "கறுப்பு ஜூலை" பற்றி எழுதிய கட்டுரையொன்றில், "காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்கள் நடத்தப்பட, குறைந்தபட்சம் ஒரு வாரம் முன்பு ஏதோ ஒன்று நடக்கப் போவது பற்றிய பேச்சு அடிபட்டது- ஏதோ ஒன்று மிகப்பயங்கரமாக, பாடம் ஒன்று கற்பிப்பது பற்றி-" என்று குறிப்பிட்டிருந்தார்.

1983 "கறுப்பு ஜூலை" பற்றி சர்வதேச நீதித்துறை வல்லுநர்கள் ஆணையத்தின் அறிக்கையில் போல் சீகார்ட், "இது திடீரென்று சிங்கள மக்களிடையே எழுந்த இனவெறுப்பு எழுச்சியோ, அல்லது சிலர் குறிப்பிடுவது போல, 13 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டமைக்கான எதிர்வினையோ இல்லை என்பது தெள-வாகத் தெரிகிறது- இது முன்னரே தெளிவாகத் திட்டமிடப்பட்டு, அந்தத் தெளிவான திட்டத்தின் படி தொடர் செயற்பாடுகளால் அறிந்தே நடத்தி முடிக்கப்பட்டது" என்று குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன, அமைச்சர்களான சிறில் மத்யு, காமினி திசாநாயக்க, லலித் அத்துலத்முதலி என, அனைவரும் நேரடியாகவும், மறைமுகமாகவும் 1983 "கறுப்பு ஜூலை" இன அழிப்பை பல வகைகளில் நியாயப்படுத்த முயன்றனரே அன்றி, அதற்காக வருத்தப்படவோ, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் தரவோ முயலக்கூட இல்லை. ஐ.தே.க.அரசின் ஆட்சியில் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன வழி நடத்தலில் முப்படையினரின் ஒத்துழைப்புடன் சிங்களக்காடையர்களை கட்டவிழ்த்துவிட்டு மேற்கொள்ளப்பட்ட ஜூலைக் கலவரம் என்ற பெயரிலான இந்த தமிழினப்படுகொலையின் பின்னர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன பிரிட்டன் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணல் சிங்களத்தின் கோர முகத்தை வெளிப்படுத்தியதுடன் அந்த முகமே இன்று வரையும் வெளிப்பட்டும் வருகின்றது.

அந்த நேர்காணலில் "இப்போது யாழ்ப்பாணத்தவர்களின் எத்தகைய அபிப்பிராயத்தைப் பற்றியும் எனக்குக் கவலையில்லை. அவர்களைப் பற்றி இப்போது நாங்கள் சிந்திக்க முடியாது. அவர்களின் உயிர்களைப் பற்றியும் எங்களுக்குக் கவலையில்லை. அவர்கள் எங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றியும் கவலையில்லை. தமிழர்களைப் பட்டினி போட்டால், சிங்களவர்கள் சந்தோஷப்படுகிறார்கள்" என ஜே.ஆர்.ஜெயவர்த்தன தெரிவித்திருந்தார். அதுமட்டுமன்றி இந்த தமிழினப்படுகொலையை வெளிநாடுகள் சில கண்டித்தபோது "எங்கள் வேலை எங்களுக்குத் தெரியும்" என்று ஜே.ஆர். ஜெயவர்த்தனா பதிலளித்தார். அத்துடன் "போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்" என்ற சூளுரையும் ஜெயவர்த்தனவால் விடுக்கப்பட்டது.

நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு, வன்முறைகளில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது பொலிஸாரும் படையினரும் ஏன் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவில்லை என டைம்ஸ் ஒவ் இந்தியா பத்திரிகை, அப்போதைய ஜனாதிபதி ஜெயவர்த்தனவிடம் ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி நேர்காணல் ஒன்றின்போது வினவியது. "படையினரிடம் பெரிய அளவில் தமிழர்களுக்கு எதிரான உணர்வு ஏற்பட்டிருந்தது என நான் நினைக்கிறேன். கலகத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினால், அது சிங்களவர்களுக்கு எதிரான நடவடிக்கையாகப் போய்விடும் என்றும் அவர்கள் (படையினர்) உணர்ந்திருந்தார்கள். உண்மையிலேயே சில இடங்களில் அவர்கள், அவர்களை (கலகக்காரர்களை) ஊக்குவித்திருந்ததை நாங்கள் கண்டோம்" என ஜெயவர்த்தன பதிலளித்திருந்தார்.

இந்த 1983 ஜூலைக்கலவரம் என்ற பெயரில் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட தமிழினப்படுகொலையே பல வரலாறுகளை எழுதியது. பல வரலாறுகளை மாற்றியது. தமிழர்களின் ஆயுதப் போராட்டம் விடுதலைப்புலிகள் தலைமையில் தீவிரம் அடைவதற்கு ஜூலைக் கலவரம் பிரதான காரணமாக அமைந்தது. தமிழர்கள், பெரும்பான்மையினமான சிங்களவர்கள் மேல் சிங்கள ஆட்சியாளர்கள் மேல் நம்பிக்கையிழக்க காரணமாக அமைந்தது. இந்த நாட்டிலே சிங்களவர்-தமிழர்கள் ஒன்றாக இணைந்து வாழ முடியாது என்ற நிலைமையை ஜூலைக் கலவரமே ஏற்படுத்தியது. அந்த நிலைதான் இன்றைய சிவப்பு சட்டை ஆட்சியாளர்களின் "மாற்றம்" ஆட்சி வரை தொடர்கின்றது.

# கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் 'கதைச்சரம்' சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது

**- குரு அரவிந்தன்**




கடந்த 13-7-2025 திகதி ஞாயிற்றுக் கிழமையன்று கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் "கதைச்சரம்" என்ற சிறுகதைத் தொகுப்பு ரொறன்ரோவில் உள்ள பைரவி நுண்கலைக் கூடத்தின் கலையரங்கில் வெளியிட்டு வைக்கப்பெற்றது.

தேனீர் சிற்றுண்டியைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றி தமிழ்தாய் வாழ்த்து, கனடா தேசியப்பண் ஆகியன செல்வி சோலை இராச்குரார், செல்வி சென்னி இராச்குமார் ஆகியோரால் இசைக்கப் பெற்றன. அதைத் தொடர்ந்து அகவணக்கம் இடம் பெற்றது.

தொடர்ந்து வரவேற்புரையை முன்னாள் தலைவரும், தற்போதைய துணைத் தலைவருமான குரு அரவிந்தன் வழங்கினார். அதன்பின் தற்போதைய தலைவர் ரவீந்திரநாதன் கனகசபையின் தலைமையுரை இடம் பெற்றது.

தொடர்ந்து கலாநிதி செல்வநாயகி ஸ்ரீதாஸ், கவிஞர் குமரகுரு, காப்பாளர் சிந்தனைப்பூக்கள் பத்மநாதன், முன்னாள் தலைவரும் காப்பாளருமான ஆசிரியர் சிவபாலு, கவிஞர் சயந்தன், இராச்குமார் குணரட்ணம் ஆகியோரது வாழ்த்துரைகள் இடம் பெற்றன.

அடுத்து மன்றச் செயலாளர் முனைவர் வாசுகி நகுலராஜாவின் நூல் அறிமுகவுரை இடம் பெற்றது. தொடர்ந்து பேராசிரியர். இ. பாலசுந்தரம் அவர்களின் நூல் வெளியீட்டுரை இடம் பெற்றது. கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் ஏற்கனவே இரண்டு சிறுகதைத் தொகுப்புக்களை வெளியிட்டிருந்தது. கவிஞர் கந்தவனம் அவர்கள் தலைவராக இருந்த போது "அரும்புகள்" என்ற முதலாவது சிறுகதைத் தொகுப்பை தொகுத்து வெளியிட்டிருந்தார். இரண்டாவது தொகுப்பு குரு அரவிந்தன் தலைவராக இருந்த போது, "சர்வதேச சிறுகதைகள்" என்ற பெயரில் தொகுத்து வெளியிட்டிருந்தார். மூன்றாவது தொகுப்பு "கதைச்சரம்" என்ற பெயரில் இன்று வெளிவருகின்றது. இதை தலைவர் ரவீந்திரநாதன் தொகுத்திருக்கின்றார்.

இந்த சிறுகதைத் தொகுப்பில் சதிவிரதன் - குரு அரவிந்தன், கூடுகள் சிதைந்தபோது - அகில், இரு துருவங்கள் - க. ரவீந்திரநாதன், பரவைக்கடல் - டானியல் ஜீவா, இலையுதிர் - சிவநயனி முகுந்தன், ஏகாநேகம் - ஸ்ரீரஞ்சனி, நோக்கப்படாத கோணங்கள் - இரா சம்பந்தன், நேர்மை - முருகேசு கிருபாகரன், ஊருக்கும் தெரியாது யாருக்கும் புரியாது - வஸந்தன், நில் கவனி - ஆர்.என். லோகேந்திரலிங்கம், மாயவருத்தத்தின் மந்திர முடிச்சு - தேவகாந்தன், மௌனமே பேசு - மாலினி அரவிந்தன், ஈழத்துச் சூரியன் - நவகீதா முருகண்டி, சமரசம் - ஐ. ஜெகதீசன், பெருமிதம் - எஸ். ஜெகதீசன், நாசகாரிகள் - மா. சித்திவினாயகம், பிஞ்சுகள் - கனி விமலநாதன், அறுவடை - அகணி சுரேஸ், காலம் செய்த கோலம் - நாகேஸ்வரி ஸ்ரீ குமரகுரு, ஆழ்வாரே சாட்சி - வீணைமைந்தன், எண்ண அலைகள் - இராஜ்மீரா இராசையா, ஏமாற்றம் தந்த அனுபவம் - த. சிவபாலு, துணை போனாலும் - சிவநேசன் சின்னையா, இப்படியும் மனிதர்கள் - கமலவதனா சுந்தா, 35 வருடங்கள் - சந்திரன் வேலாயும் ஆகிய 25 கனடாத் தமிழ் படைப்பாளிகளின் சிறுகதைகள் இடம் பெற்றிருக்கின்றன.

இந்த நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து எழுத்தாளர்களுக்குச் சான்றிதழ்களும், வருகை தந்தோருக்கு விசேட பிரதிகளும் வழங்கப்பட்டன. கனடா ஜே.ஜே. பிரின்ரேசாரின் கைவண்ணத்தில் உருவான இந்த சிறுகதைத் தொகுப்பிற்குச் செல்வி ஓவியா சுபாஸ் அவர்கள் அழகான அட்டைப்படம் வரைந்திருந்தார். நூல் ஆலோசனைக் குழுவில் ரவி கனகசபை, குரு அரவிந்தன், வாசுகி நகுலராஜா, அகணி சுரேஸ், ஆர்.என். லோகேந்திரலிங்கம், நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

தொடர்ந்து முன்னாள் தலைவரும், தற்போதைய துணைச் செயலாளருமான ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்களின் நன்றியுரை இடம் பெற்றது. நூல் வெளியீட்டு நிகழ்ச்சியை முன்னாள் தலைவரும் நிர்வாகசபை அங்கத்தவருமான அகணி சுரேஸ் அவர்கள் சிறப்பாகக் கொண்டு நடத்தினார்.




































இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாண பிரதேசத்தில் 1996 – 97 இல் காணாமலாக்கப்பட்டோர் பற்றிய விசாரணை அறிக்கை கிட்டியது

## மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வெளியீடு செம்மணி விடயத்தில் திருப்பத்துக்கு வாய்ப்பு?

நடராசா லோகதயாளன்



யாழ்ப்பாண பிரதேசத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட நால்வர் குழு யாழ்ப்பாண மாவட்டத்தில் காணாமல் போன 281 பேர் குறித்து விவரங்களுடன் சமர்ப்பித்த விசாரணை அறிக்கை 22 ஆண்டுகளுக்கு பின்னர் இப்போது வெளிப்பட்டுள்ளது.

அவர்களில் 95 வீதத்துக்கும் அதிகமானோர் 1996-97 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ் பிரதேசத்தில் இருந்து சீருடைத் தரப்பினரால் வலிந்து கடத்தப்பட்டுக் காணாமலாக்கப்பட்டவர்கள் என்று தெரிகிறது.

அவர்களின் முழுப் பெயர், விவரம், விலாசங்கள் பதிவுகளுடன் இந்த அறிக்கை மூலம் கிட்டி இருப்பதால் அவர்களது உறவினர்களின் மரபணுக்களை இப்போது செம்மணி புதைகுழியில் மீட்கப்படும் எலும்புக் கூடுகளின் மரபணுக்களோடு ஒப்பிடுவதன் மூலம், அந்த மனித எச்சங்களுக்கு உரியவர்களை அடையாளம் காணக்கூடிய வாய்ப்புக் கிட்டலாம் என்று நம்பப்படுகின்றது.

1996-97 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் யாழ் பிரதேசத்தில் பல நூற்றுக்கணக்கில் காணாமலாக்கப்பட்டோரின் எலும்புக்கூடுகளே இப்போது செம்மணி மனிதப் புதைகுழிகளிலிருந்து அகழ்ந்து மீட்கப்படுகின்றன எனக் கருதப்படும் நிலையில் அவற்றை அடையாளம் காண்பதற்கான ஒரு திருப்புமுனையாக இந்த விசாரணை அறிக்கை விவரம் அமையும் என்று கருதப்படுகின்றது.

இந்த விசாரணை அறிக்கையின் ஒரு பிரதியைத் தம் கைவசம் பெற்றுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன், அதனை இலங்கை மனித உரிமை ஆணைக்குழு மூலம் அதன் உத்தியோகபூர்வ இணையத்தில் வெளியிடச் செய்யும் அழுத்தத்தைக் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றார் எனவும் தெரிகின்றது.

யாழ் பிரதேசத்தில் காணாமல் போனோர் குறித்து விசாரித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக கலாநிதி தேவநேசன் நேசையா தலைமையில் கே.எச்.கமிலஸ் பெர்னாண்டோ, ஜஸீமா இஸ்மாயில், எம்.சி.எம்.இக்பால் ஆகிய நால்வரைக் கொண்ட குழு ஒன்றை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நியமித்திருந்தது.

இந்தக் குழு யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கொடிகாமம், சுன்னாகம், மானிப்பாய் போன்ற இடங்களில் ஒன்பது கட்டங்களாக அமர்வுகளை நடத்தி, விசாரணைகளை மேற்கொண்டு, முதலில் இடைக்கால அறிக்கையும், பின்னர் இறுதறிக்கையையும் சமர்ப்பித்திருந்தது.

அந்த அறிக்கையிலேயே 96-97 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணாமல் போன 281 க்கும் மேற்பட்டவர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியல் தெளிவாக வெளியிடப்பட்டிருக்கின்றது.

1990 தொடக்கம் 1998 வரையான காலப் பகுதியில் யாழ். பிரதேசத்தில் காணாமலாக்கப்பட்டோர் பற்றி விசாரிப்பதற்கான பொறுப்பு இந்தக் குழுவுக்கு வழங்கப்பட்ட போதிலும், 96-97 இல் காணாமலாக்கப்பட்டோர் பற்றிய முறைப் பாடுகள்தான் பெருமளவில் அந்த குழுவுக்கு கிடைத்ததாக குழுவின் அறிக்கை தெரிவிக்கின்றது.

குழுவின் அறிக்கையில் செம்மணி, நாவற்குழி தரவைகளில் படம் இணைக்கப்பட்டு, இவ்வாறு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் இங்கேதான் புதைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நம்பப்படுகின்றது எனத் தெளிவான குறிப்பும் - அப்போதே - 22 ஆண்டுகளுக்கு முன்னரே - குறிக்கப்பட்டிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

நாவற்குழியில் இருந்த அரச நெல் களஞ்சிய சாலையின் படத்தைப் பிரசுரித்துள்ள அந்த அறிக்கை, தனங்களப்பு, தச்சன்தோப்பு, நாவற்குழி போன்ற இடங்களில் கைது செய்யப்பட்ட பலர் கண்கள் கட்டப்பட்டு, கைவிலங்கிடப்பட்டு, இங்குதான் சித்திரவதை செய்யப்பட்ட பின்னர் அழைத்துச் செல்லப்பட்டார்கள் என்ற குறிப்பையும் தெரிவித்துள்ளது.

அதேபோல கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில், அப்பகுதியைச் சேர்ந்தோர் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டார்கள் என்ற விவரமும் பதியப்பட்டுள்ளது.

அது மாத்திரமல்ல, முறைப்பாடுகளின் அடிப்படையில் பார்த்தால், செம்மணியைச் சூழவுள்ள பிரதேசங்களில்தான் காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது அந்த அறிக்கையில் அவதானிக்கப்பட்டுள்ளது.

அரியாலை - 17, சாவகச்சேரி - 19, சுண்டுக்குழி - 6, கொழும்புத்துறை - 7, குருநகர் - 28, யாழ் நகர சுற்றாடல் - 20, யாழ் நகரம் - 17, கைதடி - 8, மட்டுவில் - 7, மறவன்புலோ- 6, மீசாலை - 16, நாவற்குழி - 19, நல்லூர் - 8, நுணாவில் - 4, தனங்களப்பு - 4, தச்சன்தோப்பு - 5 என்று அறிக்கையின் இணைப்பான வரைவு விவரம் வெளிப்படுத்துகின்றது.

முறைப்பாடுகளின்படி பார்த்தால் யாழ்ப்பாணம் நகரமும் சுற்றாடலும் - 95 மற்றும் 19, சாவகச்சேரி - 31, கைதடி - 11 கொடிகாமம் - 28, மீசாலை - 16, நாவற்குழி - 19 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அந்த விசாரணை அறிக்கையின் படி இவ்வாறு ஆள்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டமைக்கு இலங்கை அரசின் பாதுகாப்பு படைகளே காரணம் என்பது சாட்சியங்களில் தெரிவிக்கப்பட்டு இருப்பதாக விவரிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தக் குழுவின் அறிக்கையை ஐ.நா. உதவி திட்ட ஆதரவுடன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அச்சமயத்தில் அச்சிட்டு வெளியிட்டு இருப்பதும் நினைவூட்டப்படத்தக்கது.

இந்த விசாரணைகளுக்காக அப்போது சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதம், அரசு அதிபர் பத்மநாபன், மேலதிக அரச அதிபர் வைத்திலிங்கம், கிருஷாந்தி கொலை வழக்கின் பிரதான குற்றவாளியான கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, சித்தார்த்தன் போன்றவர்கள் சாட்சியத்துக்கு அழைக்கப்பட்டு அவர்களும் சாட்சியம் வழங்கியிருக்கிறார்கள்.

டக்ளஸ் தேவமானந்தா சாட்சியத்துக்கு அழைக்கப்பட்டார். அவர் ஒரு பிரதிநிதியை தம் சார்பில் விசாரணைக்கு அனுப்பி வைத்தார் என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

செல்வம் அடைக்கலநாதன் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டார். ஆனால் அவர் பிரசன்னமாகவில்லை என்று அறிக்கை தெரிவிக்கிறது.

இந்த அறிக்கை விசாரணையின் பின்னர் 2003 ஒக்டோபர் 28 ஆம் திகதி கையளிக்கப்பட்டமையால், அதற்கு முன்னர் சமாதான பேச்சு சமயத்தில் விடுதலைப் புலிகளின் யாழ் அரசியல் பொறுப்பாளர் இளம்பரிதியும் சாட்சியத்துக்கு அழைக்கப்பட்டு, சாட்சியம் அளித்திருக்கிறார் என்பது குழுவின் அறிக்கையில் தெரிகின்றது.

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தின் நகர கொமாண்டர் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த மற்றும் முல்லைத்தீவு படை முகாம் தகர்த்து அழிக்கப்பட்டமை ஆகியவை இடம் பெற்ற 1996 ஜூலை மாதத்தில்தான் ஆள்கள் வலிந்து கடத்திக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் பெருமளவில் யாழ் பிரதேசத்தில் நிகழ்ந்தன என அறிக்கை விவரிக்கின்றது. சுமார் 210 பக்கங்கள் கொண்ட இந்த அறிக்கை பலர் காணாமலாக்கப்பட்டமை தொடர்பான விசாரணைகளின் சுருக்க விவரங்களையும் உள்ளடக்கி இருக்கின்றது.

இப்படி காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நிவாரண அளிப்பது பற்றிய விடயம் பற்றியும் அதில் விவரிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

### வீணாவின் கவிக்கணை

வாழ்வோ சாவோ
எது வந்த போதிலும்
நீ திடமாய்
இருக்க வேண்டிய
ஒரே விடயம்
நீ நல்லவனாகவும்,
நேர்மையானவனாகவும்
எந்த நொடியிலும
சோர்வடையாது
தன்னம்பிக்கை
உடையவனாகவும்
வாழவேண்டும்
என்பது மட்டும் தான்

# செம்மணியில் குற்றவியல் சம்பவங்கள் இடம்பெற்றமைக்கான தடயங்கள் உண்டுதொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ நீதிமன்றில் அறிக்கை




யாழ். செம்மணி மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்ட பகுதியில் குற்றவியல் சம்பவங்கள் இடம்பெற்ற மைக்கான தடயங்கள் உள்ளன எனத் தான் கருதுவதாகவும், வழமையாக உடல்கள் நல்லடக்கம் செய்வது போன்று அங்கிருந்து மீட்கப்பட்ட என்புத் தொகு திகள் காணப்படவில்லை எனவும் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோம தேவ தனது அறிக்கையை நீதிமன் றத்தில் சமர்ப்பித்துள்ளார். செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பான அகழ்வுப் பணிகள் யாழ். நீதிவான் ஏ.ஏ.ஆனந்த ராஜாவின் கண்காணிப்பில் துறைசார் நிபுணரும் பேராசிரியருமான ராஜ் சோமதேவாவின் தலைமையில் இடம் பெற்றிருந்தன. சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினரும் அகழ்வுப் பணிக ளின்போது முன்னிலையாகியிருந்தனர். செம்மணி மனிதப் புதைகுழி தொடர் பான இரண்டாம் கட்ட அகழ்வுகளின் இடைக்கால அறிக்கையை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா கடந்த 10ஆம் திகதி கட்டளை ஒன்றை வழங்கியிருந்தார். இந்நிலையில், செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவாவினுடைய அறிக்கை மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இது தொடர்பான சுருக்கமான விவரங்கள் மன்றுக்கு நீதிவானால் வெளிக்கொணரப்பட்டது. ராஜ் சோமதேவாவின் அறிக்கையில் முக்கியமாக மூன்று விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. முதலாவதாக செம்மணி மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்ட குறித்த பகுதியில் குற்றவியல் சம்ப வங்கள் இடம்பெற்றமைக்கான தட யங்கள் உள்ளன எனத் தாம் கருதுவ தாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் வழமையாக உடல்கள் நல்லடக்கம் செய்யப்படுவது போன்று புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட என்புத் தொகுதிகள் காணப்படவில்லை எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேலும் இது சம்பந்தமான மேலதிக மான ஆய்வுகள் தேவை போன்ற முக்கியமான மூன்று விடயங்கள் தொல் லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவாவி னால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இடைநிறுத்தப்பட்ட செம்மணி மனி தப் புதைகுழி தொடர்பான அகழ்வுப் பணிகள் எதிர்வரும் 21ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1155

## (வரலாறும் மரபும்)

## ரம்பொட ஆஞ்சநேயசுவாமிகள் ஆலயம், ரம்பொட. மலையகம்

" கண்டிலன் உலகம் மூன்றும் காலினாற் கடந்துகொண்ட
புண்டரீகக் கண் ஆழிப்புரவலன் பொலன்கொள் சோதிக்
குண்டலவதனம் என்றால் கூறலாம் தகைமைத்து ஒன்றோ
பண்டைநூல் கதிரோன் சொல்ல படித்தவன் படிவம் அம்மா. "

அதிர்வுகள் ஒவ்வொருவருடைய உடல், உளத் தன்மையினால் உருவாக்கப்படுகின்றது. இவ்வாறே ஆலயங்களிலே நடைபெறுகின்ற கும்பாபிஷேகக் கிரிகைகள், மற்றும் மந்திரவொலிகள் போன்றவற்றினால் ஆலயங்களிலும் மிக உயர்நிலைவலயிலான அதிர்வுகள் காணப்படுகின்றன. ஆலயத்திற்குச் செல்லும் ஒருவருடையகுறைந்த அதிர்வும், ஆலயங்களிலே காணப்படுகின்ற உயர் அதிர்வும் ஒன்றிணையும் வாய்ப்பு ஏற்படுகின்றது. இதனால் மிகமிக உயர்நிலைகொண்ட (Resultant vibration) அதிர்வுகள் ஆலயத்திலுள்ள பக்தனைச் சூழ உருவாக்கப்படுகின்றது. இவ்வாறாக ஆலயத்தினுள் ஏற்படும் அதிர்வுகளினால் பக்தனின் உடலும் உள்ளமும் தூய்மையடைகின்றது. மனதை ஒருநிலைப்படுத்த இவ்வாறான அதிர்வுகள் பெருந்துணை புரிகின்றன. இவ்வாறான நிலையில் ரம்பொட ஆஞ்சநேயர் ஆலயத்திலுள்ள தியான மண்டபத்தில் அமர்ந்து தியானம் செய்பவர்கள், மனதை ஒருநிலைப்படுத்தித் தியானம் செய்வதோடு முற்றுமுழுதான பலனையும் பெற முடிகின்றது. ஆஞ்சநேயர் சிறந்த ராமபக்தர். எங்கெல்லாம் இராமநாமமோ, இராமாயண கதாகாலட்சேபமோ நிகழ்ந்தால், அங்கெல்லாம் ஆனந்தம் நிரம்பிய கண்களுடன் கூப்பிய கரங்களுடன் அரூபியாக, அருகில்நின்று செவி மடுக்கிறார் அருள்தரும் ஆஞ்சநேயர் எனப் புராணங்களிலே கூறப்பட்டுள்ளது.

இந்துமதத்திலே இறைவன் அனைத்தையும் அறிவான் என்ற கொள்கை பின்பற்றப்பட்டபோதிலும், ஸ்ரீ ஆஞ்சநேய வழிபாட்டில் மன்றாடிக் கேட்டு, பயன்பெறும் சம்பிரதாயம் கடைப்பிடிக்கப்படுகின்றது. ஒவ்வொருவரும் பிரார்த்தனை செய்து தாம் நினைப்பதை அடைவதென்பது சுலபமல்ல. அதற்குரிய பக்குவத்தை ஒரு சிலரே பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களையே குரு என்றழைக்கின்றோம். எனவேதான் பக்குவப்பட்ட குருவின்மூலம் ஆண்டவனை அடைவது சுலபம் என இந்து மதத்திலே குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான பிரார்த்தனை முறை, இறைவனிடம் மன்றாடிக் கேட்கும் முறை ஏனைய மதங்களிலும் காணப்படுகின்றது. இவ்வழிபாட்டு முறை மூலம் மக்கள் மனதிலிருக்கும் பாரம் குறைவதோடு, தமக்காக வேண்ட, தமது குறைகளைச் சொல்லி நிவர்த்தி காண ஓரிடம் இருப்பதாக எண்ணி மன ஆறுதல் அடைவர். ஸ்ரீ ராமபிரான், சீதாப்பிராட்டி ஆகியோரின் முழு அன்புக்கும் பாத்திரமானவராக ஆஞ்சநேயர் விளங்குகின்றார். இவர் விந்தியமலையில் தவமிருந்து பல வரங்களைப் பெற்றவர். ஸ்ரீ ராமபிரானுக்குத் தொண்டாற்றி அனைவராலும் வணங்கப்படும் பெரும்பேறு பெற்றவர். ஈழத்தில் ஆஞ்சநேயர் என்ற பெயரோடு வழிபாடு செய்து வருகின்றனர். ஆஞ்சநேயரின் சிறப்பியல்புகளுள் அவரின் பேரறிவு சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. நால்வேதங்கள், ஆறு வேதாங்கங்கள், அறுபத்துநான்குகலைகள், ஐந்திரவியாகரணம், என்னும் நான்குதுறைகளையும் கற்றவர். அனுமாரின் அறிவுமாட்சி கற்றவர் வியக்குந் தன்மையுடையது. அறிவுத்துறை முற்றிய மாமுனியால் வித்தகன் என்றும், பிரமன் வாயால் மேதாவியாகுக என்ற வாழ்த்தும், இராமபிரானின் திருவாயால் "யார்கொல் இச் சொல்லின் செல்வன்" என்ற புகழும் பெற்றவராக ஆஞ்சநேயர் போற்றப்படுகின்றார். தேவர்கள், மூவர்கள், முனிவர்கள் ஆகியோர் அருளிய வாழ்த்துக்கள், வரங்களினால் மரணமில்லாப் பெருவாழ்வு பெற்றவராக, பக்தர்கள் மனதிலே ஆஞ்சநேயசுவாமி குடிகொண்டுள்ளார்.

அனுமார், வீர அனுமார், ஆஞ்சநேயர், சிறிய திருவடி எனச் சமயநோக்கில் போற்றப்படும் இவர், வைணவதிருக்கோயில்களில் பரிவார தெய்வமாக எழுந்தருளியுள்ளார். வைணவதிருக்கோயில்களில் பரிவாரதெய்வமாக விளங்கும் இவர் தனியறையில் அமர்ந்து அடியார்களின் துதியைப்பெற்று அருள் வழங்குகின்றார். பிறவி காரணமாக அமைந்த உடம்பை சிற்றுருவமாகச் சுருக்குதலும், வானுயர வளர்த்து விசுவரூபம் எடுத்தலும், மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட பேராற்றல்களாகக் காணப்படுகின்றன. இவ்வாற்றலைப் பெற்றவராக ஆஞ்சநேய சுவாமி விளங்குகின்றார் ஸ்ரீ ஆஞ்சநேய வழிபாட்டால் எதையும் அறிந்து கொள்ளும் சூட்சும புத்தி, பலவீனம் விலகி உடல்பலம், ஆன்மபலவிருத்தி, புகழ் கௌரவம் அடைதல், கொள்கையில் இலட்சியத்தில் உறுதிப்பாடு, அஞ்சா நெஞ்சம், தேக ஆரோக்கியம், விழிப்புணர்வு, வாக்கு வன்மை ஆகியன ஒருங்கே அமையப்பெற்று, நல்வாழ்வு பெறலாம் என, ஸ்ரீ ஆஞ்சநேயர் சுலோகத்திலே கூறப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட ஓரிடத்திற்குச் செல்ல வேண்டும். முகவரி கையிலுள்ளது. ஆயினும் போகும் வழி தெரியவில்லை. இந்நிலையில் வழி தெரிந்த ஒருவரின் துணையோடு, அன்றி அவர் வழிகாட்டலோடு செல்வோமாயின், குறிப்பிட்ட இடத்தை மிகச் சுலபமாக அடைய முடியும். இறைவனை நோக்கிய பயணமும் இவ்வாறு தான் காணப்படுகின்றது. இறைவன் இருக்கின்றான் என்பதை ஏற்றுக் கொள்ளும் மக்களுக்கு, அவனைச் சென்றடையும் பாதை சரியாகத் தெரிவதில்லை. இப்பாதையைக் காட்டக் கூடியவர்களாக அமைபவர்களைக் குரு என்றோ, சுவாமி என்றோ அழைப்பது வழக்கம். இவ்வாறானவர்களின் வழிகாட்டலோடு சரியான பாதையில் சென்றால் நாம் நினைத்ததை அடைவது சுலபமாகிவிடும். குரு நிலையிலிருந்து மக்களை நல்வழியில் அழைத்துச் செல்பவராக, ஸ்ரீ ஆஞ்சநேயசுவாமிகள் விளங்குகின்றார்.

மேற்கூறிய சிறப்புக்களைத் கொண்ட ரம்பொட ஆஞ்சநேயர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் பத்து நாட்களுக்கு நடைபெறும். ஆஞ்சநேயரின் திருவுருவச் சிலையைத் தாங்கிய ரதம் ஊர்வலமாகச் சீதையம்மன் கோவிலுக்குச் செல்லும். அங்கு சிறப்பான பூசைகள் நிகழும். ஒவ்வொரு வருடமும் மார்கழி அமாவாசையன்று, ஆஞ்சநேயருடைய ஜெயந்திவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. ஆஞ்சநேயரை வழிபட்டால் நற்புத்தி, சரீரபலம், கீர்த்தி, அஞ்சாமை, பயமின்மை, நோயின்மை, வாக்குச்சாதுரியம் ஆகிய நன்மைகள் கிடைக்கும். இத்தகைய சிறப்புக்களை அருளும் ஆஞ்சநேய சுவாமிகளுடைய திருக்கோவில், மலையகப்பகுதியில் ரம்பொட பிரதேசத்தில் அமைந்து காணப்படுகின்றது.

வளரும்...



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# அகதிகள் சிறப்பு முகாம்களில் உள்ள ஈழத்தமிழ் உறவுகளுக்கு ஏதாவது நேர்ந்தால் இந்திய, தமிழ்நாடு அரசுகளே பொறுப்பேற்க வேண்டும்

## இயக்குனர் கௌதமன் சீற்றம்!



நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து திருச்சி சிறப்பு முகாமில் நீராகாரம் அருந்தாமல் உண்ணா நோன்பில் ஈடுபடும் யோகராசா நவநாதனின் உணர்வுகளையும், கோரிக்கைகளையும் தமிழக அரசும் இந்திய ஒன்றிய அரசும் மதிக்க வேண்டும் என பிரபல தென்னிந்திய திரைப்பட இயக்குனரும் தமிழ்ப் பேரரசு கட்சியின் நிறுவனருமாகிய வ.கௌதமன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யோகராசா நவநாதன் முன்வைத்துள்ள கோரிக்கைகளானது நிறைவேற்ற முடியாதவை அல்ல. அத்தனை கோரிக்கைகளும் நிறைவேற்றக்கூடிய கோரிக்கைகள் என்பதுடன் நியாயமான கோரிக்கைகளும்கூட.



1. தமிழ் நாட்டில் இருந்து ஈழ அகதிகளை கட்டாயப்படுத்தி திருப்பி அனுப்ப கூடாது.
2. தமிழ் நாட்டில் இருந்து ஈழத் தமிழர்களை அரசியல் வேலைகளை செய்வதற்கு சட்டத்திற்கு உட்பட்டு அனுமதிக்க வேண்டும்.
3. தமிழ் நாட்டில் உள்ள முகாம்களில் அகதிகளாக வாழும் ஈழத்தமிழர்களுக்கு இங்கு குடியுரிமை வழங்க இந்திய ஒன்றிய அரசிடம் பரிந்துரை செய்ய வேண்டும்.
4. முன்னாள் விடுதலை புலிகள் என்னும் சந்தேகத்தின் பெயரில் திருச்சி சிறப்பு முகாமில் அடைத்து வைத்திருப்பவர்களுக்கு இலங்கையில் உயிருக்கு ஆபத்து இருக்கும் ஈழத்தமிழர்களை சட்டத்திற்கு உட்பட்டு தமிழ்நாட்டில் வாழ்வதற்கு அனுமதிக்க வேண்டும். அல்லது அவர்கள் விரும்பிய நாட்டிற்கு செல்ல அனுமதிக்க வேண்டும்.

என்பனவே அந்த நான்கு அம்சக் கோரிக்கைகள்.

ஈழத்தில் இருந்து அடைக்கலம் கோரி தமிழ்நாட்டுக்கு வந்துள்ள எமது தொப்புள்கொடி உறவுகளின் குறைந்தபட்ச கோரிக்கைதைகளை கூட நிறைவேற்றுவதற்கு இதற்கு முன்னர் இருந்த இந்திய ஒன்றிய, மாநில அரசாங்கங்களும், தற்போது ஆட்சியில் இருக்கின்ற ஒன்றிய, மாநில அரசாங்கமும் முன்வராத நிலையை பார்க்கும்போது மிகவும் கவலையாகவும் அதை விட கோபமாகவும் உள்ளது.

சிறப்பு முகாம்களில் அவர்களை வைத்து உடலாலும், உள்ளத்தாலும் எவ்வளவோ துன்புறுத்தி விட்டீர்கள். இதற்கு பின்னர் கூட உங்களுக்கு மனசாட்சி உறுத்தவில்லையா? அப்படி என்ன அவர்கள் பெரிதாக உங்களை கேட்டார்கள்? அவர்களும் சாதாரண மனிதர்கள் போல் வாழ்வதற்கு தேவையான ஏற்பாடுகளை ஏன் இதன் பின்னும் உங்களால் செய்துகொடுக்க முடியவில்லை?

ஈழத்தில் அவர்களது உயிருக்கு அச்சுறுத்தல் என்கிறபடியால்தான் அவர்கள் இங்கே வந்தார்கள். ஆனால் அவர்களை நீங்கள் பார்க்கின்ற விதமோ, நடத்துகின்ற விதமோ அறமற்ற சிங்கள அதிகார வர்க்கத்திற்கு சமமானது என்று கூட சொல்ல முடியாது அதைவிடவும் சற்று மேலானது என்பது எத்தகைய குரூரம். ஈழத்தில் அவர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் இருக்கின்ற விடயம் என்பது நூறு சதவிகித உண்மை என்பதை தற்போதைய ஈழத்தின் செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அமைந்துள்ள மனிதப் புதைகுழியை அகழும்போது அங்கே எங்களின் தொப்புள்கொடி உறவுகளுக்கு நிகழ்ந்த அநியாயங்களையும், அக்கிரமங்களையும் கண்கூடாக பார்க்கக்கூடியதே ஆகப் பெரும் சாட்சியாக நிற்கின்றது. இதனை வைத்து பார்க்கும்போது இதற்கு மேலும் உங்களுக்கு பட்டவர்த்தனமாக தெரியவில்லையா அவர்களுக்கு அங்கே உயிர் அச்சுறுத்தல் இருக்கிறதென்கிற விடயம்?

அரசியல் ஆதாயத்திற்காக தொப்புள்கொடி உறவுகள் என்று நாம் வாய் கிழிய கத்தினால் மட்டும் போதாது. அந்த தொப்புள் கொடி உறவுகள் அடைக்கலம் புகுந்த நமதிடத்தில் அவர்களை காப்பாற்ற வேண்டிய கடமையும் பொறுப்பும் நம் அத்தனை பேருக்கும் உள்ளது என்பதை தமிழ்நாடு அரசும், தமிழ் நாட்டு மக்களும் மறந்து விடாதீர்கள்.

ஏற்கனவே ஒரு தியாக தீபம் திலீபனின் உயிரை காப்பாற்ற முடியாத பாவிகளாக இந்திய ஒன்றியம் வெட்கித் தலை குனிந்து நிற்கின்றது. மேலும் அதுபோல் ஒரு பாவச் செயல் இடம்பெறாமல் தடுக்க வேண்டியது எமது கடமை. எனவே யோகராசா நவநாதனின் கோரிக்கைகளுக்கு இனியாவது செவி சாயுங்கள். அவர்களையும் வாழ விடுங்கள். அன்னம் தண்ணி நீர் ஆகாரமின்றி எட்டாவது நாளை கடந்து உண்ணா நிலையிலிருக்கும் சகோதரர் யோகராசா நவநீதன் அவர்களின் உயிரை காப்பாற்றும் வகையில் உடனடியாக மருத்துவ சிகிச்சை தர வேண்டும். இதன் பிறகும் தமிழ் நாட்டில் இருக்கின்ற ஈழத்தமிழ் உறவுகளுக்கு ஏதாவது ஒன்று நடந்தால் இந்திய அரசோ மாநில அரசோ நீங்கள்தான் அதற்கு பொறுப்பேற்க வேண்டும் என்பதனை எச்சரிக்கையுடன் தெரிவித்துக்கொள்கிறேன் என காட்டமாக தெரிவித்துள்ளார்.

# பட்டிருப்பு வலய மாணவர்களுக்கான ஸ்மார்ட் வகுப்பறை நிகழ்நிலை கற்றல் தொடக்கவிழா (14-7-2025)

## Online Smart Classroom Inauguration




இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் பட்டிருப்பு வலயம் நகர்ப்புறம் சார்ந்த பகுதிகளைவிட தொலைதூர கிராமப்புறங்கள் அதிகமாகவும் பின்னடைவான பகுதிகளாகவும் இருப்பதால் சமமான கல்விவாய்ப்புக்காக மாணவர்கள் அங்கலாய்க்கும் நிலையே உள்ளது, பிரதானமாக கணித விஞ்ஞான பாடங்களுக்கான ஆசிரியர்கள் பெருமளவு பற்றாக்குறையாக உள்ளனர். இதனை நிவர்த்தி செய்யும் வகையில் கணித விஞ்ஞான ஆசிரியர்களில்லாத பத்து இடைநிலை பாடசாலைகளை நிகழ்நிலை டிஜிட்டல் முறையில் (Online digital) இணைத்து ஸ்மார்ட் பலகையூடாக (smart board learning) கற்றல்கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்ள திட்டம் முன்வைக்கப்பட்டது.

அனைத்துலக மருத்துவ நல அமைப்பும் (IMHO-USA) ரட்ணம் நிறுவனமும் (Ratnam Foundation) இவ்வரிய




செயற்பாட்டை செயற்படுத்த முன்வந்தமை சிறப்புக்குரியது. இதற்கான நிதிப்பங்களிப்பை தமது அன்புப்பெற்றோர். Dr. பிரம்மன், விஜயலக்ஷ்மி சிவப்பிரகாசபிள்ளை ஆகியோரின் ஞாபகார்த்தமாக திருமதி. தர்ஷனா சிவா அவர்கள் விருப்புடன் நல்கியுள்ளார்.

இதன்படி தெரிவுசெய்யப்பட்ட பத்து பாடசாலைகளுக்கு ஸ்மார்ட் டிஜிட்டல் பலகைகள் (smart board units) வழங்கப்பட்டதோடு நிகழ்நிலை கற்றலுக்கான நிலையத்துக்கும் ஒரு ஸ்மார்ட் பலகை வழங்கப்பட்டது. வளவாளர்களாக கணித,விஞ்ஞான துறை ஆசிரியர்கள் தெரிவுசெய்யப்பட்டு பத்து பாடசாலை மாணவர்களுக்குமான பொது நேரசூசியின் மூலம் தரம் 10,11 மாணவர்கள் நான்கு மணிநேர நிகழ்நிலை கற்றல் கற்பித்தலில் இணைக்கப்படுகின்றனர். இதன்உடனடி பலனாக ஆயிரத்துக்கு குறையாத மாணவர்கள் பயன் பெறுவதுடன் இருபது கணித விஞ்ஞான துறை ஆசிரியர்களது பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்பட்டு ஒரே விதமான ஆசிரியர்களது கற்பித்தல் அனுபவத்தை மாணவர்கள் பெறுவதற்கு வழிவகுத்துள்ளது.

14-7-2025 அன்று பட்டிருப்பு வலயகல்வித்திணைக்களத்தில் அமைந்துள்ள ஸ்மார்ட் ஆசிரிய




வளநிலையத்தில் இத்திட்டம் சிறப்பாக தொடக் கிவைக்கப்பட்டது வலயக்கல்விப்பணிப்பாளர் சிறீ-தரன், IMHO பிரதிநிதி முத்து இராதாகிருஷ்ணன், IMHO கிழக்குமாகாண இணைப்பாளர் பிரதீபகாந், மற்றும் பாட-சாலை அதிபர்கள், பிரதிப்பணிப்பாளர்கள் என பங்குபற்றி இந்நிகழ்வை சிறப்பித்தனர்.

# தேசிய மீனவ இயக்கத்தின் யாழ்ப்பாணம் மாவட்ட தலைவர் முரளீதரனை விசாரணைக்கு அழைத்துள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவு



சமூக செயற்பாட்டாளரும், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ்ப்பாணம் மாவட்ட தலைவரும், காணி உரிமைக்கான மக்கள் இயக்க தலைவருமான இரத்தினசிங்கம் முரளிதரனை எதிர்வரும் 20-07-2025 அன்று காலை 9:00 மணிக்கு பரந்தனிலுள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவு அலுவலகத்திற்கு சமூகமளிக்குமாறு பயங்கரவாத தடுப்பு பிரிவு தொலைபேசியூடாக அழைப்பு விடுத்துள்ளனர்.

இவர் காணி உரிமை, மீனவர்கள் உரிமை, உட்பட பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்துவருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# செம்மணியில் புத்தகப்பையோடு மீட்கப்பட்டஎலும்புக்கூட்டுத் தொகுதி சிறுமியினுடையது நீதிமன்றில் சட்ட மருத்துவ அதிகாரி அறிக்கை

நடராசா லோகதயாளன்



யாழ்ப்பாணம் - செம்மணிப் புதைகு ழியில் நீல நிறப் புத்தகப்பை (யுனிசெவ் நிறுவனத்தின் புத்தகப்பை), சிறுவர்கள் விளையாடும் பொம்மை போன்றவற் றோடு அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதி 4-5 வயது-டைய சிறுமியினு டையது என்று சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையாவால் நீதிமன் றத்தில் தெரிவிக்கப்பட்டது. செம்மணிப் புதைகுழியில் இருந்து நீல நிறப் புத்தகப்பை, சிறுவர்கள் விளையாடும் பொம்மை என்பவற்றோடு அகழ்ந்தெடுக்கப்பட்ட சிறுவரின் என்புத் தொகுதி எனச் சந்தேகிக்கப்படும் என்புத் தொகுதி தொடர்பான மனித என்பு ஆய்வு அறிக்கையை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் மன்றில் சமர்ப்பிக்குமாறு சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையாவுக்கு யாழ்ப் பாணம் நீதிவான்

ஏ.ஏ. ஆனந்தராஜா கடந்த 10ஆம் திகதி கட்டளை ஒன்றினை வழங்கியிருந்தார். இந்நிலையில் செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கு யாழ்ப் பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் விசார ணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அந்த என்புத் தொகுதி தொடர்பான அறிக்கை மன்றுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. நீல நிறப் புத்தகப்பை, சிறுவர்கள் விளையாடும் பொம்மை போன்றவற் றோடு அடையாளம் காணப்பட்ட எஸ் - 25 என அடையாளமிடப்பட்ட என்புத் தொகுதி சிறுமியின்

என்புத் தொகுதி எனவும், உத்தேசமாக 4-5 வயது டைய-தாக இருக்கும் எனவும் சட்ட மருத்துவ அதிகாரி மன்றில் தனது அறிக்கையை வெளியிட்டார். மேலும் எஸ் - 48, எஸ் - 56 என அடையாளமிடப்பட்ட சிறுவர்களினுடைய என்புத் தொகுதிகள் எனச் சந்தேகிக் கப்படும் என்புத் தொகுதிகள், புத்தகப் பையோடு அடையாளம் காணப்பட்ட சிறுமியினுடைய என்புத் தொகுதியோடு உடைகள் மற்றும் என்பியல் சம்பந்தமாக ஒருமித்த தன்மைகள் இருப்பதாகவும் மன்றுக்கு சட்ட மருத்துவ அதிகாரியால் சுட்டிக்காட்டப்பட்டது. புத்தகப்பையோடு அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதியில் மேற்கொள்ளப்பட்டது போன்ற என்பு ஆய்வை சிறுவர்களினுடையது என நம்பப்படும் குறித்த இரண்டு என்புத் தொகுதிகள் மீதும் மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் மன்றால் அறிவுறுத்தப்பட்டது.


செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு இடம்பெறும் பகுதிக்கு தன்னையும் அனுமதிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கோரிக்கை முன்வைத்திருந்த நிலை யில் சட்டத்தரணி ஒருவரின் பிரசன்னத் துடன் அகழ்வுப் பணி இடம்பெறும் பகுதிக்கு விஜயம் செய்வது தொடர்பில் பரிசீலிப்பதாக யாழ்ப்பாணம் நீதிவா னால் மன்றில் அறிவிக்கப்பட்டது. செம்மணி மனிதப் புதைகுழி தொடர் பான வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நீ-திவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு

இடம்பெறும் பிர தேசத்துக்குத் தனது பிரசன்னம் முக்கியமானது எனவும், தன்னை அனுமதிக்குமாறும் மன்றில் கோரிக்கை முன்வைத்தார். அந்தக் கோரிக்கை நீதிமன்றில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஏற்கனவே மன்றில் இருக்கின்ற கட்ட ளைகளுக்கு அமைவாக நபர் ஒருவர் செம்மணி மனிதப் புதைகுழிக்கு விஜயம் செய்கின்றபோது மன்றுக்கு முறையாக விண்ணப்பம் செய்து தான் விஜயம் செய்வதற்கான காரணத்தைக் குறிப் பிடும் நடைமுறை உள்ளதை நீதிவான் மன்றில் எடுத்துரைத்தார். சமர்ப்பணங்களையடுத்து நாடாளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், சட்டத்தரணி ஒருவரின் பிரசன்னத்துடன் அகழ்வுப் பணி இடம்பெறும் பகுதிக்கு விஜயம் செய்வது தொடர்பில் பரி சீலிப்பதாக நீதிவானால் மன்றில் அறி விக்கப்பட்ட.


# 28ம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர். விநாயகமூர்த்தி ஆனந்தராஜா

(நவக்கிரி, புத்தூர்)



விடுதலை வேங்கையோடு வீரமிகு போராளியாய்
விண்ணில் மறைந்த மாவீரனே!
மண்ணில் நீர் வாழ்ந்த காலம் குறைவே – ஆனாலும்
சோதனைகளையும் வேதனைகளையும்
சாதனைகளாக்கி அந்த சாதனைகளின்
சாம்ராச்சியத்தின் சரித்திரம் – நீர்
தேசத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டவன் நீர்
வித்திட்டவன் வித்தாகி போன
விந்தைதான் என்ன!
மண்ணுக்காய் மாண்டவர் என்பதனால் நிறைவு எமக்கு
மீண்டும் வருவீர் என நாம் ஏங்குகின்றோம்
ஈரவிழிகளுடன் ...

தோற்றம் 29-12-1972

மறைவு 19-07-1997

ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும் குடும்பத்தினர்

(416) 888-1128, (905) 205-1070

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND · INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US



**NESAN**
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · First National Financial LP · TD Canada Trust · Manulife · National Bank · Desjardins · RFA · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

















உதயம் 1528 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 18, 2025

# ஒன்ராறியோ அரசு எலும்பியல் அறுவைசிகிச்சைகளை விரிவுபடுத்துவதற்காக 125 மில்லியன் டொலர் முதலீடு செய்கிறது

## – அமைச்சர் விஜய் தணிகாசலம் தெரிவிப்பு



இடுப்பு மற்றும் முழங்கால் மாற்று அறுவைசிகிச்சைகள் உள்ளிட்ட எலும்பியல் அறுவைசிகிச்சைகளுக்கான அணுகலை மேம்படுத்த, ஒன்ராறியோ அரசு 125 மில்லியன் டொலர் முதலீட்டை சமூக அறுவைசிகிச்சை மற்றும் கண்டறிதல் மையங்கள் வழியாக மேற்கொள்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் வருடத்திற்கு கூடுதலாக 20,000 அறுவைசிகிச்சைகள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலுமபடமெடுப்பு மற்றும் குறைக்கேட்பு சேவைகளை மேம்படுத்த 155 மில்லியன் டொலரும், 300,000 பேருக்கும் அதிகமானவர்களுக்கு முதன்மை மருத்துவ சேவைகளை விரிவுபடுத்த 235 மில்லியன் டொலரும் முதலீடு செய்ததின் தொடர்ச்சியாக அமைகிறது.

“காத்திருக்கும் நேரத்தை குறைத்து, மக்களுக்கு அருகிலேயே சிகிச்சையை கொண்டு வருவதற்காக எங்கள் அரசு தீர்மானமான நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இந்த முதலீடு, ஒன்ராறியோ முழுவதும் உள்ள குடும்பங்கள் தேவையான நேரத்தில், தேவையான இடத்தில், அரசு நிதியளிக்கக்கூடிய அறுவைசிகிச்சைகளை பெறுவதை உறுதி செய்கிறது,“ என அமைச்சர் விஜய் தணிகாசலம் தெரிவித்தார். இந்த துணிவான முயற்சியுடன், அறுவைசிகிச்சைக்கான காத்திருப்பு நேரத்தை குறைக்கும் பணியில், அரசுத் தொகை மருத்துவ அமைப்பை பலப்படுத்தும் முயற்சியில் ஒன்ராறியோ மாகாணம் கனடாவை முன்னணியில் அழைத்துச் செல்கிறது என்றும் அமைச்சர் விஜய் தணிகாசலம் தெரிவித்துள்ளார்.

# கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் "கதைச்சரம்" சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது

கடந்த 13-07-2025 திகதி ஞாயிற்றுக் கிழமையன்று கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் “கதைச்சரம்” என்ற சிறுகதைத் தொகுப்பு ரொறன்ரோவில் உள்ள பைரவி நுண்கலைக் கூடத்தின் கலையரங்கில் வெளியிட்டு வைக்கப்பெற்றது.

முதலில் மங்கள விளக்கேற்றி தமிழ்தாய் வாழ்த்து, கனடா தேசியப்பண் ஆகியன செல்வி சோலை இராச்குரார், செல்வி சென்னி இராச்குமார் ஆகியோரால் இசைக்கப் பெற்றன. அதைத் தொடர்ந்து அகவணக்கம் இடம் பெற்றது. தொடர்ந்து வரவேற்புரையை முன்னாள் தலைவரும், தற்போதைய துணைத் தலைவருமான குரு அரவிந்தன் வழங்கினார். அதன்பின் தற்போதைய தலைவர் ரவீந்திரநாதன் கனகசபையின் தலைமையுரை இடம் பெற்றது. தொடர்ந்து கலாநிதி செல்வநாயகி ஸ்ரீதாஸ், கவிஞர் குமரகுரு, காப்பாளர் சிந்தனைப்பூக்கள் பத்மநாதன், முன்னாள் தலைவரும் காப்பாளருமான ஆசிரியர் சிவபாலு, கவிஞர் சயந்தன், இராச்குமார் குணரட்ணம் ஆகியோரது வாழ்த்துரைகள் இடம் பெற்றன.
(தொடர்ச்சி 18ம் பக்கம்)



# மட்டக்களப்பு மாநகரசபை அமர்வில் செம்மணி படுகொலைக்கு கண்டனமும் சர்வதேச நீதியான விசாரணை கோரி பிரேரணை நிறைவேற்றமும்

## தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் உட்பட 34 உறுப்பினர்களும் ஏக மனதாக ஆதரவு வழங்கி நிறைவேற்றப்பட்டது.



செம்மணி படுகொலைக்கு கண்டனமும் சர்வதேச நீதியான விசாரணை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும் என கோரி மட்டக்களப்பு மாநகரசபை அமர்வில் தமிழரசு கட்சி உறுப்பினர் துரைசிங்கம் மதன் 17ம் திகதி அன்று வியாழக்கிழமை கொண்டு வந்த பிரேரணையினை தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் உட்பட 34 உறுப்பினர்களும் ஏக மனதாக ஆதரவு வழங்கி நிறைவேற்றப்பட்டது.

மட்டு மாநகர சபையின் இரண்டாவது சபை அமர்வு மாநகரசபை முதல்வர் சிவம் பாககியநாதன் தலைமையில் இடம்பெற்றது இதன் போது தமிழரசு கட்சியின் உறுப்பினர் துரைசிங்கம் மதன் யாழ் செம்மணி புதைகுழி தொடர்பில் இடம்பெற்ற படுகொலைக்கு கணடனம் தெரிவித்தும் அதற்கு சர்வதேச நீதி விசாரணை வேண்டும் என கோரி பிரேரணை ஒன்றை கொண்டுவந்து உரையாற்றினார். (தொடர்ச்சி 5ம் பக்கம்)

# மனித உரிமைகள் ஆணையாளருடைய வருகைக்குப் பின்னரான அரசியல்

## – யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



செம்மணியில் எடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள் தாங்களாக நீதிமன்றம் போகப்போவதில்லை. அவற்றை தமிழ் மக்கள்தான் நீதிமன்றத்திற்கு கொண்டு போக வேண்டும். குறிப்பாக ஐநா அதனைச் செய்யும் என்று எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால் அண்மையில் நாட்டுக்கு வருகை தந்த ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் தனது வருகையின் முடிவில் கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்த உத்தியோகபூர்வமான கருத்துக்கள் தமிழ் மக்களுக்கு உற்சாகமூட்டுபவைகளாக இல்லை. உள்நாட்டு விசாரணை பொறிமுறையை வெளிநாட்டு உதவிகளோடு மேம்படுத்துவது தொடர்பாகத் தான் அவர் அங்கு பேசியிருந்தார்...”முடிவாக இது நாட்டின் (இலங்கையின்) பொறுப்பாகும்,மேலும் இந்த செயல்முறை தேசிய அளவில் சொந்தமானது என்பது முக்கியம். அதோடு,இது சர்வதேச வழிமுறைகளால் பூர்த்தி செய்யப்பட்டு ஆதரிக்கப்படலாம்.”என்று அவர் கூறினார்.
(தொடர்ச்சி 10 ம் பக்கம்)







